# சிலாங்கூர்

இன்று இலவசம்

SMART SELANGOR

www.selangorkini.my Media_Selangor selangortv.my MediaSelangor

SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2051 / சார்வரி ஆண்டு தை மாதம் / ஜனவரி 1/2022 JANUARY 1/2022


# 30,000 குடும்பத்தினருக்கு வெ.1,000 உதவித் தொகை மந்திரி புசார்

ஷா ஆலம் – வெள்ள்ளத்தால் பாதிக்கப்பட்ட குறைந்தது 30,000 குடும்பத்தினர் சிலாங்கூர் பங்கிட் திட்டத்தின் கீழ் 1,000 வெள்ளி உதவித் தொகையைப் பெறுவர். வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களின் சுமையைக் குறைக்கும் நோக்கிலான இத்திட்டம் பெட்டாலிங் மாவட்டத்தில் நேற்று தொடங்கி மேற்கொள்ளப்பட்டு வருவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

இந்த உதவித் தொகை வழங்கும் திட்டம் இதர மாவட்டங்களுக்கும் கட்டங் கட்டமாக விரிவுபடுத்தப்படும். தற்காலிக நிவாரண மையங்களில் தங்கியிருந்தவர்களுக்கு நிதி வழங்கப்பட்டப் பின்னர் நிவாரண மையங்களுக்குச் செல்லாதவர்களை அடையாளம் காணும் பணியில் ஈடுபடுவோம் என்றார் அவர்.

இன்று காலை ரேடியோ ஹோட் எஃப்.எம். வானொலிக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார். பொருள் சேதத்திற்கு உள்ளான அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும் இந்த திட்டம் விரிவுபடுத்தப்படும் என்றத் தகவலையும் அமிருடின் வெளியிட்டார்.

வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மத்திய அரசிடமிருந்து 1,000 வெள்ளி உதவித் தொகையை பெறுவர். மேலும் முஸ்லீம் குடும்பங்களுக்கு ஸக்கத் அறவாரியம் மூலம் 600 வெள்ளி வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

சிலாங்கூரின் பல்வேறு மாவட்டங்களில் கடந்த வாரம் ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக 10 கோடி வெள்ளி நிதியில் சிலாங்கூர் பங்கிட் திட்டத்தை மாநில அரசு தொடக்கியது.

இத்திட்டத்தின் கீழ் வெள்ளத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு 10,000 வெள்ளியும் உடமைகளை இழந்தவர்களுக்கு 1,000 வெள்ளியும் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.



"வெள்ளத்தில் சிக்கிய குடும்ப மாதுவையும் அவர் குழந்தையையும் மீட்டு நிவாரண முகாமிற்கு அனுப்ப மந்திரி புசார் நேரடியாக களமிறங்கினார்."


தாய்மார்களே! உதவிகளை பெற முன்வாருங்கள்.
பக்கம் 3

சிலாங்கூர் மாநிலத்திலுள்ள 637 பள்ளிகளுக்கு வெ.2.32 கோடி மானியம்- டாக்டர் குணராஜ் வரவேற்பு
பக்கம் 6

சிலாங்கூர் இந்தியர்கள் சிறு தொழில் பேம்பாட்டு ''சித்தம்'' அமைப்பின் வழி டீமளா தேவிக்கு தையல் இயந்திரம்
பக்கம் 11

# மக்கள் ஒற்றுமையே நமது பலம் மந்திரி புசார்

ஷா ஆலம் :- சிலாங்கூர், சரவாக், சபா மற்றும் மலேசியா முழுவதும் உள்ள கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் எனது அன்பான கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மகிழ்ச்சியளிக்கும் வேளை, நம்பிக்கை மற்றும் மரபுகளின் படி இவ்வேளையில் குடும்பங்கள் ஒன்றிணைகின்றன. கடினமான மற்றும் சவாலான ஆண்டிற்குப் பிறகு, பழையதை நினைவு படுத்தும் பொன்னான தருணம். கிறிஸ்துமஸ் பண்டிகை.

கடந்த காலத்தைப் போலன்றி, பலருக்கு வித்தியாசமாகவும் இருக்கலாம். அதற்கு பல்வேறு காரணங்களும் இருக்கலாம். கடந்த ஆண்டு இந்த வேளையில் COVID-19 தொற்றுநோயை எதிர்த்துப் போராட்டம், அடுத்து மற்றொரு அலை பிறகு மீண்டும் ஒரு வைரஸ். இந்த ஆண்டு, வார இறுதியில் நடந்த சோகம் குறைந்தது 48 குடும்பங்களை ஆழ்ந்த துயரத்தில் வீழ்த்தியது. இந்த நாட்டில் ஏற்பட்ட மிக மோசமான வெள்ளத்தால் நாட்டில் பலர் தங்கள் நேசத்திற்கு உரியவர்களை இழந்துள்ளனர். கிட்டத்தட்ட 90,000 நபர்கள் வெளியேற்றப்பட வேண்டியிருந்தது. குறைந்தது 25,000 சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டது.



## வலிமையான சிலாங்கூரைக் கட்டமைக்க :-

இதய துடி—துடிப்பை அதிகரிக்கும், மன வேதனையை தரும் சேதத்தை ஏற்படுத்தியது, ஆனால் அது நாம் ஊக்கத்தை இழக்க வழி விடக்கூடாது இந்த சோகத்திலிருந்து மீள்வோம். இழப்பு ஏற்படுத்திய வலியை உணர்கிறோம். ஆனால் அதில் மூழ்கி விடக்கூடாது. மாறாக துக்கம் நமது உறுதிப்பாட்டை, நம்பிக்கையை வலுப்படுத்தும் கோளாக எடுத்துக்கொள்ள வேண்டும். சில நபர்கள் மிக முக்கியமான தருணங்களில் பந்தை கை விட்ட நேரத்தில், சிலாங்கூரியர்களும் மலேசியர்களும் இந்த நாட்டின் தேவையின் போது ஒற்றுமையாக எழுந்தனர். இளைஞர்கள், யுவதிகள் மற்றும் அனைத்து தரப்பு மக்களும் சவால்மிக்க வேளையில் கைகோர்த்து எழுவதைக் கண்டு எனக்கு நம்பிக்கை மேலோங்குகிறது. உணவு ஏற்பாடுகளை ஒன்றுபட்டு செய்தது, நிவாரண மையங்களுக்கு ஆடைகள் அனுப்பியது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வழிபாட்டுத் தலங்களை கூட்டாக சுத்தம் செய்தது போன்ற நிவாரண நடவடிக்கைகள் நாம் முன்னெப்போதையும் விட ஒன்றுபட்டு இருக்கிறோம் என்பதை காட்டுகிறது. நெருக்கடியான தருணங்களில் மட்டுமின்றி, நமது சமூக அல்லது அரசியல் தலைவர்கள் நமது ஒற்றுமையின் உறுதியை பொறுமையை சோதித்து பார்க்கும் சமயங்களில் கூட நாம் ஒன்றுபட்டு நிற்போம் என்பது எனது உண்மையான நம்பிக்கை.

கடந்த கால சிலாங்கூரின், வலி மிகுந்த சோகத்தில் இருந்து நாம் பாடம் கற்றுக் கொண்டோம். தற்போதைய மற்றும் எதிர்கால கால சவால்களை சிறப்பாக எதிர்கொள்ள மிகவும் ஆக்கரமான நிலையை உருவாக்க உறுதியளிக்கிறேன்.

எங்களின் உடனடி முன்னுரிமை #SelangorBan-gkit மூலம் முடிந்தவரை விரைவாகவும் பாதுகாப்பாகவும் மக்களை அவர்கள் வீடுகளுக்குத் திரும்ப செய்வதே ஆகும். உணவைத் தவிர, அடிப்படைத் தேவைகளுக்கு இந்த வார தொடக்கத்தில் நான் அறிவித்த நடவடிக்கைகள் தொடரும். விடுமுறை நாட்களில் பயணம் செய்யும் நீங்கள், கோவிட்-19 வைரஸை கவனத்தில் கொண்டு இன்னும் பொறுப்புடன் பயணம் செய்வது நலம். சுய பரிசோதனைகளை தொடரவும், நிச்சயமற்ற பிராந்திய வானிலைகள் குறித்து கூடுதல் எச்சரிக்கையுடன் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் உயிர், உடைமை பாதுகாப்புக்கு உள்ளூர் அதிகாரிகள், இருப்பிடங்களை காலி செய்யச் சொன்னால், அவர்களின் ஆலோசனை படி உடனே செயல்படுங்கள். இந்த விடுமுறை காலத்தில் உங்கள் அன்புக்குரியவர்களுடன் பொன்னான நேரத்தைச் செலவிடும் வாய்ப்பையும் பண்டிகைகளையும் அனுபவிக்க. உங்கள் அனைவருக்கும் எனது குடும்பத்துடன் கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி டத்தோ மந்திரி புசார் சிலாங்கூர்

# ஸ்ரீ மூடாவில் மதகு அருகே உள்ள வீடமைப்புத் திட்டத்திற்கும் வெள்ளத்திற்கும் தொடர்பில்லை




ஷா ஆலம், டிச 30- இங்குள்ள தாமான் ஸ்ரீ மூடாவில் மதகு அருகே மேற்கொள்ளப்படும் வீடமைப்புத் திட்டத்திற்கும் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்திற்கும் தொடர்பிருப்பதாக கூறப்படுவதை சிலாங்கூர் அரசு வன்மையாக மறுத்துள்ளது.

இப்பகுதியில் தடுப்பணை எதுவும் உடையவில்லை என்பதும் தாங்கள் ஆய்வில் தெரியவந்துள்ளதாக அடிப்படை வசதிகள் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஷாம் ஹஷிம் கூறினார்.

கம்போங் லொம்போங் பகுதியில் ஏற்பட்ட தடுப்பணை உடைந்த சம்பவமும் உடனடியாக சரி செய்யப்பட்டதாக அவர் சொன்னார்.

நான் ஏற்கனவே பல முறை கூறியது போல் வழக்கத்தைக் காட்டிலும் அதிகமாக பெய்த மழையின் காரணமாகவே வெள்ளம் ஏற்பட்டது என்று அவர் தெரிவித்தார். அந்த வீடமைப்புத் திட்டம் குறித்து கருத்துரைத்த அவர், கடந்த 2015 ஆம் ஆண்டில் அந்த திட்டத்திற்கான திட்டமிடல் அனுமதி வழங்கப்பட்டதாகவும் வெள்ள நீர் சேகரிப்பு குளம் நிர்மாணிப்பது உள்ளிட்ட அனைத்து நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஈராண்டுகளுக்குப் பின்னர் அத்திட்டத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார். தடுப்பணை உடைந்தாலும் உடையாவிட்டாலும்கூட வெள்ளம் நிச்சயம் ஏற்பட்டிருக்கும். காரணம், அதிகப்படியான மழையின் காரணமாக கிள்ளான் ஆறும் சுங்கை ராசாவ் ஆறும் ஒன்று சேருமிடத்தில் நீர் பெருக்கெடுத்து வெள்ளம் ஏற்பட்டது என்றார் அவர்.

தாமான் ஸ்ரீ மூடாவிலுள்ள மதகு அருகே செய்தியாளர்களைச் சந்தித்த போது இஷாம் இவ்வாறு கூறினார். சமூக மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினரும் கோத்தா கெமுனிங் சட்டமன்ற உறுப்பினருமான வீ.கணபதிராவும் உடனிருந்தார்.

ஸ்ரீ மூடாவில் வெள்ளம் ஏற்பட்டதற்கு தடுப்பணை உடைந்ததும் மதகு அருகே மேற்கொள்ளப்படும் வீடமைப்புத் திட்டமும் காரணம் என்று அரசியல்வாதி ஒருவர் குற்றஞ்சாட்டியிருந்தது தொடர்பில் அவர் இவ்வாறு பதிலளித்தார்.

தாமான் ஸ்ரீ மூடா பகுதியில் வெள்ள அபாயத்தை குறைப்பதற்காக புதிய மதகை நிர்மாணிப்பதற்கு மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறியிருந்ததையும் அவர் சுட்டிக்காட்டினார். விநாடிக்கு 5,100 லிட்டர் நீரை இறைத்து வெளியேற்றும் திறன் கொண்ட பம்ப் உள்ளிட்ட வசதிகளை புதிய மதகு கொண்டிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

## செந்தோசா தொகுதியில் 1,500க்கும் மேற்பட்டோர்

# வெள்ள நிவாரண நிதிக்கு விண்ணப்பம்



கிள்ளான் – செந்தோசா தொகுதியைச் சேர்ந்த 1,500க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் 1,000 வெள்ளி வெள்ள உதவித் தொகைக்கு விண்ணப்பம் செய்துள்ளதாக தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் கூறினார். பாதிக்கப்பட்டவர்கள் விரைவாக விண்ணப்பம் செய்வதற்கு ஏதுவாக தாங்கள் நேரில் சென்று அவர்களிடம் விண்ணப்ப பாரங்களை வழங்கி வருவதாக அவர் சொன்னார். அவர்கள் விண்ணப்ப பாரத்தை பூர்த்தி செய்தவுடன் நான் அதில் உடனடியாக கையெழுதிட்டு அடுத்தக் கட்ட நடவடிக்கைக்காக மாவட்ட நில அலுவலகத்திடம் ஒப்படைக்கிறோம் என்றார் அவர். நிதியுதவி தொடர்பான அறிவிப்பை மாநில அரசு கடந்த செவ்வாய்கிழமை வெளியிட்டது முதல் நாங்கள் விண்ணப்ப பாரங்களை வெளியிட ஆரம்பித்து விட்டோம். இத்தகைய விண்ணப்பங்களை பரிசீலிக்கும் முதல் அலுவலகமாக கிள்ளான் மாவட்ட நில அலுவலகம் விளங்குகிறது என்று அவர் குறிப்பிட்டார். மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரியுடன் இணைந்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தாமான் மஸ்னா, தாமான் செந்தோசா பகுதிகளைப் பார்வையிட்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். இத்தொகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை நான்காயிரத்திற்கும் அதிகமாக இருக்கும் எனக் கூறிய அவர், பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக இந்த உதவி நிதிக்கு விண்ணப்பம் செய்யும்படி கேட்டுக் கொண்டார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக சிலாங்கூர் அரசு 10 கோடி வெள்ளி ஒதுக்கீட்டில் சிலாங்கூர் பங்கிட் திட்டத்தை கடந்த செவ்வாய்க்கிழமை அறிவித்தது.

## நீர்ப் பெருக்கைத் தடுக்க கிள்ளான் ஆற்றின் கரைகள் மேம்படுத்தப்படும்

ஷா ஆலம் – எதிர் வரும் காலங்களில் ஆற்று நீர் பெருக்கெடுத்து குடியிருப்பு பகுதிகளில் நுழைவதை தடுக்க கிள்ளான் ஆற்றின் கரைகள் வலுப்படுத்தப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். அதே சமயம் ஆற்றின் அருகே உள்ள நீர் இறைப்பு பம்ப் மையங்களும் அகற்றப்படும் என்று அவர் சொன்னார். ஒவ்வொரு முறையும் வெள்ளத்தில் பாதிக்கப்படும் அந்த பம்ப் கருவிகளை பழுதுபார்க்க 2 முதல் 3 கோடி வெள்ளி வரை செலவு பிடிப்பதாக அவர் சொன்னார். இத்திட்டத்திற்கான அடிப்படை வேலைகள் முற்றுப் பெற்று விட்டன. இம்மாதம் 18 ஆம் தேதி ஏற்பட்டதைப் போல் ஆற்று நீர் பெருக்கெடுக்கும் சம்பவங்கள் இனியும் நிகழாதிருப்பதை உறுதி செய்ய விரும்புகிறோம். இப்பணிகளை இன்னும் ஒரு மாத காலத்தில் முடிக்க திட்டமிட்டுள்ளோம் என்றார் அவர். ஆற்று நீர் அருகிலுள்ள கிராமப் பகுதிகளில் நுழைவதை தடுப்பதற்கான தடுப்பணையாக விளங்கும் கரைகளை வலுப்படுத்துவதற்கு பைலிங் வேலைகளை செய்ய வேண்டியுள்ளது என அவர் குறிப்பிட்டார். கம்போங் புக்கிட் லஞ்சோங்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் துப்புரவுப் பணிகளை பார்வையிட்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு கூறினார்.

## தாய்மார்களே! உதவிகளை பெற முன்வாருங்கள்.

ஷா ஆலம் – சிலாங்கூரின் ஏழைகளுக்கு உதவ அதிகமான திட்டங்கள் இருந்தும், மாநில அரசு வழங்கும் உதவிகளைப் பெற முன் வராதது ஏமாற்றம் அளிக்கிறது. நமது இந்திய கிராமத் தலைவர்கள் மற்றும் நகராட்சி உறுப்பினர்கள் தனித்து வாழும் தாய்மார்களின் பதிவில் உதவலாம். “கிஸ் ஐ.டி.” எனப்படும் தனித்து வாழும் தாய்மார்களுக்கான ஸ்மார்ட் சிலாங்கூர் அன்னையர் பரிவுத் திட்டத்தின் கீழ் மேலும் அதிகமானோர் பயன்பெறுவதை உறுதி செய்வதற்காக அந்த திட்டம் ஒருமுகப்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு 5,000 கோட்டா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வேளையில் கடந்த அக்டோபர் மாதம் வரை 1,661 பேர் மட்டுமே உதவி பெற்றுள்ளதாக சமூக பொருளாதார மேம்பாட்டுத்



துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் கூறினார். உதவி பெறத் தகுதியுள்ள நிறைய பேர் வெளியில் உள்ளனர். இத்திட்டத்திற்கு விண்ணப்பம் செய்வோர் உண்மையில் தனித்து வாழும் தாய்மார் என்பதை உறுதிப்படுத்தும் அதேவேளையில் வருமானம் மற்றும் குடும்ப நிலை தொடர்பான கூடுதல் ஆவணங்களையும் அவர்கள் சமர்பிக்க வேண்டும் என்று அவர் சொன்னார். அடுத்தாண்டில் இத்திட்டம் சிலாங்கூர் நல்வாழ்வுத் திட்டம் (பிங்காஸ்) என்ற பெயரில் தரம் உயர்த்தப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். மாநில சட்டமன்றத்தில் இன்று இத்திட்டத்தில் குறைவான பங்கேற்பு குறித்து பத்தாங் காலி உறுப்பினர் ஹருமாய்னி ஓமார் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இவ்வாறு கூறினார். சிலாங்கூரில் நகர்ப்புற ஏழ்மை மற்றும் தனித்து வாழும் தாய்மார்கள் குறித்த கேள்விக்கு, சமூகநல இலாகாவின் வசம் இதன் தொடர்பான இல்லை என்று அவர் தெரிவித்தார்.

### வெள்ளம் பாதித்த இடங்களில்

## குப்பைகளை அகற்றும் பணி

### இரவு வரை நீட்டிப்பு



ஷா ஆலம் – வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குப்பைகளை அகற்றும் பணியை கும்புலான் டாருள் ஏசான் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் நிறுவனம் இரவு வரை நீடித்துள்ளது. பாதிக்கப்பட்ட பல இடங்களில் மின் விநியோகம் வழக்க நிலைக்குத் திரும்பியதைத் தொடர்ந்து நேற்றிரவு தொடங்கி குப்பைகளை அகற்றும் நேரம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ரம்லி முகமது தாஹிர் கூறினார். முன்பு பாதிக்கப்பட்ட பல பகுதிகள் இருள் சூழ்ந்தும் வாகனங்கள் செல்ல முடியாத நிலையிலும் இருந்ததால் இப்பணிகளை இரவு வரை மேற்கொள்ள முடியாத நிலை இருந்ததாக அவர் சொன்னார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு செளகர்யத்தை ஏற்படுத்தும் நோக்கில் பணி செயல்முறையை தாங்கள் மறுஆய்வு செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். வீடுகள், கடைகள் மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து குப்பைகளை அகற்றுவதில் நாங்கள் பெரும் சவாலை எதிர்நோக்கி வருகிறோம். இப்பணிக்கு அதிகமான மனிதவளம் தேவைப்படுவதோடு அவர்களுக்கு தேவையான ஓய்வும் வழங்க வேண்டியுள்ளது என்றார் அவர். வெள்ள பாதிப்புக்குள்ளான பகுதிகளில் கடந்த 19 ஆம் தேதி முதல் குப்பைகளை அகற்றும் பணிகளை இந்த மாநில அரசின் துணை நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இப்பணி இன்னும் ஒரு வார காலத்தில் முற்றுப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வெள்ளத் தடுப்பு பணிகளுக்கு
## சிலாங்கூர் அரசு வெ 6 கோடி ஒதுக்கீடு




ஷா ஆலம் – அடுத்தாண்டில் வெள்ளத் தடுப்பு பணிகளை மேற்கொள்வதற்கு சிலாங்கூர் மாநில அரசு 6 கோடி வெள்ளியை ஒதுக்கீடு செய்துள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். மாநிலத்தில் நீண்ட கால அடிப்படையில் வெள்ளப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் இத்திட்டம் அமல்படுத்தப்படுவதாக அவர் சொன்னார். இவ்வாண்டைப் போலவே வரும் 2022 ஆம் ஆண்டிற்கும் வெள்ளத் தடுப்புத் திட்டங்களுக்கு 6 கோடி வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும், நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக இவ்வாண்டிற்கான ஒதுக்கீட்டில் 4 கோடி வெள்ளி முதல் 4.5 கோடி வெள்ளி வரை மட்டுமே செலவிடப்பட்டது என்றார் அவர். இவ்வாண்டிற்கான ஒதுக்கீட்டில் மேலும் 4 கோடி வெள்ளியை அதிகரித்துள்ளோம். அத்தொகை யாவும் நீண்ட காலத் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும் என்று அவர் மேலும் சொன்னார். சிலாங்கூரில் வெள்ள நிலவரம் தொடர்பில் பெர்னாமா வானொலிக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

# நாட்டில் நேற்று வரை 53 லட்சம் பேர்
## ஊக்கத் தடுப்பூசியைப் பெற்றனர்



கோலாலம்பூர் – நாட்டில் நேற்று இரவு 11.59 மணி வரை 53 லட்சத்து 89 ஆயிரத்து 370 பேர் ஊக்கத் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். நேற்று மட்டும் 23,698 பேருக்கு இந்த மூன்றாவது தடுப்பூசி செலுத்தப்பட்டதாக சுகாதார அமைச்சின் கோவிட்நாவ் அகப்பக்கம் கூறியது. இது தவிர நாட்டிலுள்ள பெரியவர்களில் 2 கோடியே 28 லட்சத்து 35 ஆயிரத்து 291 பேர் அல்லது 97.5 விழுக்காட்டினர் கோவிட்-19 தடுப்பூசியை முழுமையாகப் பெற்றுள்ளதாக அது தெரிவித்தது. மேலும் 2 கோடியே 31 லட்சத்து 34 ஆயிரத்து 791 பேர் அல்லது 98.8 விழுக்காட்டினருக்கு குறைந்த பட்சம் முதல் டோஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டது. இதனிடையே, நாட்டிலுள்ள 12 முதல் 17 வயது வரையிலான இளையோரில் 87.2 விழுக்காட்டினர் அல்லது 27 லட்சத்து 45 ஆயிரத்து 182 பேர் இரண்டு டோஸ் தடுப்பூசியையும் 90.2 விழுக்காட்டினர் அல்லது 28 லட்சத்து 39 ஆயிரத்து 706 பேர் குறைந்தது ஒரு டோஸ் தடுப்பூசியையும் பெற்றுள்ளனர். நேற்று மொத்தம் 25,457 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது. அதில் 23,698 பேர் ஊக்கத் தடுப்பூசியையும் 1,244 பேர் இரண்டாவது டோஸ் தடுப்பூசியையும் 515 பேர் முதல் டோஸ் தடுப்பூசியையும் பெற்றனர். இதன் வழி பிக் எனப்படும் தேசிய கோவிட்-19 தடுப்பூசித் திட்டத்தின் வழி செலுத்தப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கை 5 கோடியே 67 லட்சத்து 48 ஆயிரத்து 229 ஆக உயர்ந்துள்ளது.

## ஸ்ரீ மூடாவில் வடிகால் முறையை மேம்படுத்த
# ஒரு கோடி வெள்ளி ஒதுக்கீடு



ஷா ஆலம் – தாமான் ஸ்ரீ மூடாவில் வடிகால் முறையை மேம்படுத்த சிலாங்கூர் வடிகால் மற்றும் நீர்பாசனத் துறை (ஜேபிஎஸ்) மூலம் மாநில அரசு 1 கோடி வெள்ளியை ஒதுக்கீடு செய்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் முதல் தேதி தொடங்கப்பட்ட இத்திட்டம் தற்போது வரை நான்கு விழுக்காடு பூர்த்தியடைந்துள்ள நிலையில் ஜூலை 1, 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முழுமையாக தயாராக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அடிப்படை வசதிகள் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஷாம் ஹஷிம் கூறினார்.

மூன்று பம்ப் ஸ்க்ரூ யூனிட்களை நிறுவுவதற்கு ஏதுவாக மேடை கட்டமைப்பை அமைப்பது மற்றும் அப்பகுதியின் பிரதான குழாயை மேம்படுத்துவது ஆகியவற்றை இத்திட்டம் உள்ளடக்கியுள்ளதாக அவர் சொன்னார்.


நடப்புத் தேவை மற்றும் சூழலின் அடிப்படையில் இங்கு நிலவும் வெள்ளப் பிரச்சினையை முழுமையாக தீர்க்க இந்த திட்டம் உதவும் என்று நம்புகிறோம் என்று அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார்.

தாமான் ஸ்ரீ மூடாவில் வெள்ளம் ஏற்பட்டதற்கு அங்குள்ள நீர் இறைக்கும் பம்ப் சரி செய்யப்படாததே காரணம் என்ற குற்றச்சாட்டுக்கு பதிலளித்த இஷாம், அங்கு ஏற்கனவே இரண்டு நடமாடும் பம்ப் இயந்திரங்கள் உள்ள நிலையில் கூடுதலாக இரண்டு புதிய யூனிட்களைச் சேர்க்கப்பட்டுள்ளதாக கூறினார்.

அந்த நான்கு பம்ப் செட்டுகளின் செயல்பாடுகளை நவம்பர் 17 அன்று தாமும் சமூக நலத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் வீ. கணபதிராவும் நேரில் சென்று பார்வையிட்டதாக அவர் விளக்கினார்.

பொதுமக்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தும் வகையிலான தவறான தகவல்களை வெளியிடுவதை தவிர்க்கும்படி ஊடகங்கள உள்ளிட்ட தரப்பினரை அவர் கேட்டுக் கொண்டார்.

## ∴ பைசர், அஸ்ட்ரேஸேனேகா பெற்றவர்கள் மூன்று மாதத்திற்குப் பின்னர் ஊக்கத் தடுப்பூசி பெற வேண்டும்



ஷா ஆலம் – குறைந்தது மூன்று மாதங்களுக்கு முன்னர் ஃபைசர் மற்றும் அஸ்ட்ராஸேனேகா தடுப்பூசி பெற்றவர்கள் ஊக்கத் தடுப்பூசியைப் பெற வேண்டும் என அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

மூத்த குடிமக்கள், பெரியவர்கள் மற்றும் நோய்த் தாக்கம் உள்ளவர்கள் வரும் ஜனவரி தொடங்கி இந்த மூன்றாவது தடுப்பூசியைப் பெற பரிந்துரைக்கப்படுவதாக சுகாதார அமைச்சர் கைரி ஜமாலுடின் கூறினார்.

முன்னதாக, சினோவேக் தடுப்பூசியைப் பெற்ற 18 வயதுக்கும் மேற்பட்ட அனைவரும் ஊக்கத் தடுப்பூசியைப் பெற வேண்டும் என அரசாங்கம் அறிவுறுத்தியிருந்தது.

# வெ. 200,000 மதிப்புள்ள வெள்ள நிவாரண உதவிகளை ராஜா மூடா பெற்றுக் கொண்டார்




ஷா ஆலம் – வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்காக லாவ் கெக் போ அறவாரியம் வழங்கிய 2 லட்சம் வெள்ளி மதிப்பிலான உதவிப் பொருள்களை மேன்மை தங்கிய சிலாங்கூர் ராஜா மூடா பெற்றுக் கொண்டார்.

வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு மற்றும் வீடுகளைச் சுத்தம் செய்யும் உபகரணங்களை வாங்குவதில் லாவ் கெக் போ அறவாரியமும் ராஜா மூடா துங்கு அமீர் ஷா புரவலராக இருக்கும் சேய் எனப்படும் சிலாங்கூர் இளைஞர் அமைப்பும் இணைந்து செயல்படும் என சிலாங்கூர் அரச அலுவலகம் கூறியது.

மாநிலத்தில் வெள்ளம் ஏற்பட்டது முதல் ராஜா மூடா மக்களுக்கு உதவும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். கடந்த சனிக்கிழமை இங்குள்ள சுல்தான் சலாவுடின் அப்துல் அஜிஸ் ஷா பள்ளிவாசலில் தங்கியுள்ளவர்களை அவர் சென்று கண்டு உதவிகளை வழங்கினார். அதோடு மட்டுமின்றி அவர் பேரங்காடிக்கு நேரில் சென்று பொருள்களை வாங்கி செக்சன் 16 மற்றும் தாமான் மேரு ஜெயாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கி உதவினார்.

மேலும், கம்போங் பாரு ஐக்கோமில் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் பணியில் அவர் ஈடுபட்டதோடு பாடாங் ஜாவா மற்றும் தெலுக் பங்ளிமா காராங்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிப் பொருள்களையும் ஒப்படைத்தார்.

# வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களை மாமன்னர் சந்தித்தார்



ஷா ஆலம் – இங்குள்ள சியாஸ்ட் தொழில்பயிற்சி மையத்தில் உள்ள தற்காலிக வெள்ள நிவாரண மையத்தில் தங்கியுள்ளவர்களை மாட்சிமை தங்கிய பேரரசர் இன்று சந்தித்தார். நான்கு சக்கர இயக்க வாகனத்தை சொந்தமாக ஓட்டிக் கொண்டு காலை 9.50 மணியளவில் இந்த மையத்திற்கு வந்த பேரரசர் அல்–சுல்தான் ரியாத்துடின் அல்–முஸ்தாபா பில்லா ஷா அவர்களை சிலாங்கூர் ராஜா மூடா துங்கு அமீர் ஷா வரவேற்றார். சிலாங்கூர் மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி, ஆயுதப்படைகளின் தளபதி ஜெனரல் டான் ஸ்ரீ அப்பாண்டி புவாங், நிதியமைச்சர் டத்தோஸ்ரீ ஜப்ருள் துங்கு அப்துல் அஜிஸ் ஆகியோரும் மாமன்னரை வரவேற்க திரண்டிருந்தனர்.

வெள்ள நிலவரம் தொடர்பில் கிள்ளான் மாவட்ட அதிகாரி முகமது பைசால் மாமன்னருக்கு விளக்கமளித்தார்.

மாமன்னர் அவர்கள் சுமார் ஒரு மணி நேரத்தை அந்த மையத்தில் செலவிட்டு வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுடன் உரையாடியதோடு அவர்களின் சுமையைக் குறைக்கும் வகையில் உதவிகளையும் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து தாமான் ஸ்ரீ மூடா பள்ளிவாசலில் தங்கியுள்ளவர்களை மாமன்னர் சென்று கண்டார். கடந்த 18 ஆம் தேதி ஏற்பட்ட வெள்ளத்தில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட பகுதியாக தாமான் ஸ்ரீ மூடா விளங்குகிறது

# வெள்ளம் , சிலாங்கூர் சுல்தான் ஷரபுதீன் இத்ரிஸ் ஷா அல்ஹாஜ், வருத்தம்



ஷா ஆலம் – சிலாங்கூர் சுல்தான் ஷரபுதீன் இத்ரிஸ் ஷா அல்ஹாஜ், மாநிலத்தில் பெரும்பாலான மாவட்டங்களைத் தாக்கும் மிக மோசமான வெள்ளப் பேரழிவு குறித்து தனது வருத்தத்தை வெளிப்படுத்தியுள்ளார். பாதிக்கப்பட்ட பகுதிகளின் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களைப் பார்த்து மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் குறித்து அவரது அரச உயர் அதிகாரியும் கவலையும் அக்கறையும் கொண்டிருந்தார்.

"வெள்ளம் நிறைந்த சாலைகளால் பல இடங்கள் பாதிக்கப்பட்டு துண்டிக்கப் பட்டுள்ளதாகவும், இன்றுவரை மிகவும் அசாதாரண வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடியிருப்புப் பகுதிகள் துண்டிக்கப் பட்டதாகவும் எனக்குத் தெரிவிக்கப்பட்டது," என்று அவர் இன்று சிலாங்கூர் ராயல் அலுவலக பேஸ்புக்கில் ஒரு அறிக்கையில் தெரிவித்தார். சிலாங்கூர் ஆட்சியாளர். எதிர்பாராத வெள்ளத்திற்குத் தயாராகும் வகையில் இன்னும் விரிவான செயல் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார். "இது விரைவான பதிலைப் பெறுவதற்கும், மக்களின் நலன் மற்றும் நல்வாழ்வு எப்போதும் கவனிக்கப் படுவதற்கும் ஆகும்," என்று அவர் கூறினார். பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் அந்தந்த அதிகாரிகள் விரைந்து சென்று உதவ வேண்டும் என்று அவரது ராயல் ஹைனஸ் விரும்பினார். சிலாங்கூர் சக்காட் வாரியம் (LZS) வெள்ள நிவாரண மையங்களுக்கு தொடர்ந்து உதவிகளை வழங்கவும், மக்களின் நெருக்கடியான சூழ்நிலையை அடையாளம் காணவும் சுல்தான் ஷராஃபுதீன் உத்தரவிட்டார். இருப்பினும், மிகவும் கடினமான சூழ்நிலையை எதிர்கொண்ட போது ஒருவருக்கொருவர் உதவிய சமூக உறுப்பினர்கள் மற்றும் ஆதரவுக் குழுக்களின் ஒத்துழைப்பின் உணர்வைக் கண்டு சிலாங்கூர் ஆட்சியாளர் நெகிழ்ந்தார். இந்த வெள்ள அனர்த்தம் விரைவில் முடிவடைந்து மக்களின் அனைத்து விடயங்களும் இலகுவாகி இயல்பு நிலைக்குத் திரும்புமாறு அல்லாஹ் சுப்ஹானஹு வத்தஆலாவிடம் பிரார்த்திக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்

# கொடுத்த வாக்கை காப்பாற்றும் சிலாங்கூர் மாநில அரசு



கோம்பாக் – கடந்த சனிக்கிழமை பத்துமலை தமிழ்ப்பள்ளியில் சிலாங்கூர் மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி மற்றும் சிலாங்கூர் மாநில சமூக பொருளாதார மேம்பாடு, சமூக நலன், தொழிலாளர் ஆற்றல் துறை ஆட்சிக்குழு உறுப்பினர் வீ. கணபதிராவ் 2021 ம் ஆண்டுக்கான தமிழ்ப்பள்ளிகளின் மானியத்தை தமிழ்ப்பள்ளிகளின் பெற்றோர் ஆசிரியர் சங்க பொறுப்பாளர்களிடம் ஒப்படைத்தனர்.

பெரும்பாலும் ஒரு ஆண்டின் ஒதுக்கீடு என்பது அதே ஆண்டில், நவம்பர் மாத இறுதிக்குள் வழங்கிவிடுவதே முறை. அப்படி ஒப்படைக்கப் படாத மானியத்தை அரசாங்கம் மீட்டுக்கொள்வதே நடைமுறை.

ஆனால் ஆண்டின் இறுதி மாதத்தில், அதுவும் பள்ளிகள் ஆண்டில் கல்வி தவணைகளை சரியாக முடிக்காத நிலையிலும், வாக்களித்த மானியத்தை வாக்களித்தபடி இந்த அரசு வழங்குகிறது என்றால் நாட்டு மக்களுக்கு இந்த அரசு அளிக்கும் மரியாதைக்கான அளவுகோல், அரசாங்கத்தின் பொறுப்பையும் நாணயத்தையும் அது உணர்த்துகிறது என்றார் வீ. கணபதிராவ் அவர் உரையில்.

இந்திய சமுதாயத்தின் மீது அரசாங்கம் காட்டும் பரிவு, தமிழ் கல்வி, மொழி மீதும் இந்தியர்கள் மீதும் அரசாங்கம் கொண்டிருக்கும் நம்பிக்கைக்குப் மற்றொரு சான்று ஒதுக்கப்பட்ட 50 லட்சம் வெள்ளிகளையும், ஒரு காசு குறையாமல் தமிழ்ப்பள்ளிகளுக்கு அப்படியே வழங்கியுள்ளது. அரசாங்கத்தின் நாணயத்தை எடுத்துக்காட்டுகிறது.

சிலாங்கூரில் உள்ள 9 மாவட்ட தமிழ்ப்பள்ளிகளும் பெற்றுக்கொண்ட தொகையின் விவரம் பின்வருமாறு.

சபா பெர்ணம் மாவட்டம்.
– 2 தமிழ்ப்பள்ளிகள் 90 ஆயிரம்

உலு சிலாங்கூர் மாவ.
– 10 தமிழ்ப்பள்ளிகள்
5 லட்சத்து 60 ஆயி.

– கோலசிலாங்கூர் மாவ.
19 தமிழ்ப்பள்ளிகள்
7 லட்சத்து 15 ஆயி.

– கோம்பாக் மாவட்டம்
6 தமிழ்ப்பள்ளிகள் 4 லச்சத்து 20 ஆயி.

– உலு லங்காட் மாவட்ட
7 தமிழ்ப்பள்ளிகள்
3 லட்சத்து 80ஆயி.

– பெட்டாலிங் மாவட்டம்
16 தமிழ்ப்பள்ளிகள்
9 லட்சத்து 30 ஆயி.

– கிள்ளான் மாவட்டத்தில்
14 தமிழ்ப்பள்ளிகள்
5 லட்சத்து 60 ஆயி.

– கோல லங்காட் மாவட்ட.
13 தமிழ்ப்பள்ளிகள்
6 லட்சத்து 5 ஆயி.

– சிப்பாங் மாவட்டம்
8 தமிழ்ப்பள்ளிகள் 3 லட்சத்து 50 ஆயி.

இந்த மாவட்டத்தில் சுங்கை பீலேக் என்ற இடத்தில் எழுப்பும் 9 வது தமிழ்ப்பள்ளி ஆண்டு ஆரம்பத்தில், பள்ளி கட்டுமான தேவைக்கு மானிய கோரிக்கையை வைத்து ஒரு லட்சம் வெள்ளிகளை பெற்றுக் கொண்டனர். அதனுடன் 50 லட்சம் மாநில அரசின் மானியம் முழுவதுமாக விநியோகிக்கப்பட்டு விட்டது.

# சிலாங்கூர் மாநிலத்திலுள்ள 637 பள்ளிகளுக்கு வெ.2.32 கோடி மானியம்



ஷா ஆலம் – சிலாங்கூர் மாநிலத்திலுள்ள 637 தமிழ், சீன மற்றும் சமயப் பள்ளிகளுக்கு 2 கோடியே 32 லட்சம் வெள்ளியை மாநில அரசு மானியமாக வழங்கியுள்ளதை செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் வரவேற்றுள்ளார்.

இந்த மானியம் மூலம் மாணவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்குரிய வாய்ப்பு ஏற்படும் என்று அவர் சொன்னார்.

சிலாங்கூர் மாநிலத்திலுள்ள 637 தமிழ், சீன, முபாலிக் மற்றும் மக்கள் சமயப் பள்ளிகளுக்கு 2 கோடியே 32 லட்சம் வெள்ளி மானியமாக வழங்கப்படுவது தொடர்பான அறிவிப்பை மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கடந்த மாதம் 26 ஆம் தேதி 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த போது வெளியிட்டிருந்தார்.

மந்திரி புசாரின் இந்த அறிவிப்பு தொடர்பில் கருத்துரைத்த போது இந்திய சமூகத்திற்கான மந்திரி புசாரின் சிறப்பு பிரதிநிதியுமான டாக்டர் குணராஜ் இவ்வாறு தெரிவித்தார்.

மாநில அரசின் இந்த ஒதுக்கீட்டில் 50 லட்சம் வெள்ளி மாநிலத்திலுள்ள 97 தமிழ்ப்பள்ளிகளுக்கு வழங்கப்படுகிறது.

# 17 லட்சத்து 90 ஆயிரம் வெள்ளிகள்

## 4 மாவட்டங்களை சார்ந்த தமிழ்ப்பள்ளிகளுக்கு



கோம்பாக் – சிலாங்கூரில் உள்ள அனைத்து தமிழ்ப்பள்ளிகளுக்கும் ஆண்டுதோறும் மாநில அரசாங்கம் மானியம் வழங்கி வருகிறது. ஆனால் அதனை எப்படி பள்ளி மற்றும் மாணவர் நலத் திட்டங்களுக்கு பயன்படுத்துவது என்பதை பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கம் தீர்மானிக்கிறது.

பள்ளிகளின் பெற்றோர் ஆசிரியர் சங்க வங்கி கணக்கில் இந்த தொகை சேர்க்கப்படும், பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக மாநில அரசு இந்த மானியத்தை வழங்குகிறது என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்

இவ்வாண்டு மானியத்துக்கான கோரிக்கைகளை அனுப்பிய 95 தமிழ் பள்ளிகளிலிருந்து சபாக் பெர்ணம், உலு சிலாங்கூர், கோம்பாக் மற்றும் கோலசிலாங்கூர் மாவட்டங்களில் உள்ள பள்ளிகள் மற்றும் அவைகளுக்கு வழங்கியுள்ள தொகையின் விவரத்தை சிலாங்கூர் இன்று வெளியிடுகிறது.

| எண் | பள்ளியின் பெயர்– தே.ம.ஆ.தமிழ்ப்பள்ளி | மாவட்டம் | தொகை |
|---|---|---|---|
| 1 | லாடாங் சுங்கை பெர்ணம் | சபாக்பெர்ணம் | 40,000 |
| 2 | லாடாங் சபாக் பெர்ணம் | சபாக்பெர்ணம் | 50,000 |
| 3 | லீமா பிலாஸ் | உலுசிலாங்கூர் | 15,000 |
| 4 | லாடாங் எஸ்கோட் | உலுசிலாங்கூர் | 45,000 |
| 5 | லாடாங் களும்பாங் | உலுசிலாங்கூர் | 50,000 |
| 6 | லாடாங் செங்காட் ஆசா | உலுசிலாங்கூர் | 50,000 |

| | | | |
|---|---|---|---|
| 7 | கோலக் குபு பாரு | உலுசிலாங்கூர் | 70,000 |
| 8 | லாடாங் நைகல் கார்டன் | உலுசிலாங்கூர் | 40,000 |
| 9 | லாடாங் கெர்லிங் | உலுசிலாங்கூர் | 100,000 |
| 10 | லாடாங் சுங்கை சோ | உலுசிலாங்கூர் | 60,000 |
| 11 | லாடாங் பத்தாங் காலி | உலுசிலாங்கூர் | 70,000 |
| 12 | புக்கிட் பெருந்தோங் | உலுசிலாங்கூர் | 60,000 |
| 13 | காந்திஜி | கோலசிலாங்கூர் | 30,000 |
| 14 | லாடாங் சுங்கை திங்கி | கோலசிலாங்கூர் | 40,000 |
| 15 | லாடாங் ஹோப் புல் | கோலசிலாங்கூர் | 20,000 |
| 16 | லாடாங் மேரி | கோலசிலாங்கூர் | 15,000 |
| 17 | லாடாங் ரிவர்சைட் | கோலசிலாங்கூர் | 40,000 |
| 18 | லாடாங் சுங்கை தாராப் | கோலசிலாங்கூர் | 40,000 |
| 19 | லாடாங் ராஜாமூசா | கோலசிலாங்கூர் | 40,000 |
| 20 | லாடாங் கம்போங் பாரு | கோலசிலாங்கூர் | 30,000 |
| 21 | வாகீசர் | கோலசிலாங்கூர் | 50,000 |
| 22 | லாடாங் சிலாங்கூர் ரிவர் | கோலசிலாங்கூர் | 40,000 |
| 23 | லாடாங் புக்கிட் ரோத்தான் பாரு | கோலசிலாங்கூர் | 40,000 |
| 24 | லாடாங் சுங்கை பூலோ | கோலசிலாங்கூர் | 30,000 |
| 25 | லாடாங் சுங்கை ரம்பாய் | கோலசிலாங்கூர் | 40,000 |
| 26 | லாடாங் கோலசிலாங்கூர் | கோலசிலாங்கூர் | 50,000 |
| 27 | லாடாங் புரோண்ஸ்டன் | கோலசிலாங்கூர் | 40,000 |
| 28 | பிஸ்தாரி ஜெயா | கோலசிலாங்கூர் | 50,000 |
| 29 | லாடாங் புக்கிட் செராக்கா | கோலசிலாங்கூர் | 40,000 |
| 30 | லாடாங் கோல்பில்ட்ஸ் | கோலசிலாங்கூர் | 40,000 |
| 31 | லாடாங் துவான் மீ | கோலசிலாங்கூர் | 40,000 |
| 32 | பத்து ஆராங் | கோம்பாக் | 60,000 |
| 33 | லாடாங் புக்கிட் டாரா, சுங்கை பூளோக் | கோம்பாக் | 60,000 |
| 34 | குவாங் | கோம்பாக் | 60,000 |
| 35 | ரவாங் | கோம்பாக் | 85,000 |
| 36 | பத்து கேவ்ஸ் | கோம்பாக் | 85,000 |
| 37 | தாமான் மெலாவத்தி | கோம்பாக் | 75,000 |

# சிலாங்கூர் அரசின் மானியம் பெற்ற பெட்டாலிங், கிள்ளான் உட்பட 5 மாவட்ட தமிழ்ப்பள்ளிகளின் விவரம்




கோம்பாக் – கோவிட் தொற்றை எதிர்த்து போராடுவதில் பல பொருளாதார சவால்களை எதிர்நோக்கிய போதிலும் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி தலைமையில் செயல்படும் சிலாங்கூர் மாநில அரசு கடந்த சனிக்கிழமை பத்துமலை தமிழ்ப்பள்ளியில் சிலாங்கூர் தமிழ்ப்பள்ளிகளுக்கான மானிய விநியோகத்தை திட்டமிட்டப்படி வழங்கினார். அதில் உலு லங்காட், பெட்டாலிங், கிள்ளான், கோலலங்காட் மற்றும் சிப்பாங் ஆகிய 5 மாவட்டங்களை சார்ந்த மானியம் பெற்ற பள்ளிகளின் முழு விவரம். சிப்பாங் மாவட்டத்தில் சுங்கை பீலேக் என்று இடத்தில் எழுப்பும் தமிழ்ப்பள்ளி ஆண்டு ஆரம்பத்தில், பள்ளி கட்டுமான தேவைக்கு மானிய கோரிக்கையை முன் வைத்து ஒரு லட்சம் வெள்ளிகளை பெற்றுக் கொண்டது. அதனுடன் 50 லட்சம் மாநில அரசின் மானியம் முழுவதுமாக விநியோகிக்கப்பட்டு விட்டது.

| பள்ளியின் பெயர்- தே.ம.ஆ.தமிழ்ப்பள்ளி | மாவட்டம் | தொகை |
|---|---|---|
| அம்பாங் | உலுலங்காட் | 50,000 |
| லாடாங் டோமினியன் | உலுலங்காட் | 20,000 |
| லாடாங் ரிஞ்சிங் | உலுலங்காட் | 60,000 |
| லாடாங் செமிஞ்சே | உலுலங்காட் | 60,000 |
| காஜாங் | உலுலங்காட் | 85, 000 |
| பாங்கி | உலுலங்காட் | 80,000 |
| வெஸ்கன்றி தீமோர் | உலுலங்காட் | 25 000 |
| பூச்சோங் | பெட்டாலிங் | 65,000 |
| எப்.ஈ.எஸ் செர்டாங் | பெட்டாலிங் | 65, 000 |
| லாடாங் கின்ராரா | பெட்டாலிங் | 65, 000 |
| காசல்பீல்ட் | பெட்டாலிங் | 65, 000 |
| துன் சம்பந்தன் | பெட்டாலிங் | 50, 000 |
| லாடாங் சீபில்டு | பெட்டாலிங் | 35, 000 |
| சீப்போர்ட் | பெட்டாலிங் | 50, 000 |
| லாடாங் கிளேன் மேரி | பெட்டாலிங் | 50, 000 |
| விவேகானந்தா | பெட்டாலிங் | 85,000 |
| எப்பிங்கம் | பெட்டாலிங் | 60, 000 |
| சரஸ்வதி சுங்கை பூலோ | பெட்டாலிங் | 50, 000 |
| ஆர்.ஆர்.ஐ | பெட்டாலிங் | 55,000 |
| லாடாங் மிட்லேண்ட்ஸ் | பெட்டாலிங் | 50,000 |
| லாடாங் ராசாக் | பெட்டாலிங் | 50,000 |
| லாடாங் ஈபோர் | பெட்டாலிங் | 50,000 |
| சுங்கை ரெங்கம் | பெட்டாலிங் | 85,000 |
| மெதடிஸ் காப்பார் | கிள்ளான் | 60,000 |
| லாடாங் வலம்பூரோசா | கிள்ளான் | 50,000 |
| லாடாங் ஜலான் ஆக்கோப் | கிள்ளான் | 50,000 |
| லாடாங் ப்ரெஸ்டன் | கிள்ளான் | 40,000 |
| லாடாங் புக்கிட் ராஜா | கிள்ளான் | 40,000 |
| தெப்பி சுங்கை கிள்ளான் | கிள்ளான் | 50,000 |
| ஜலான் மேரு | கிள்ளான் | 60,000 |
| பெர்சியாரான் ராஜா மூடா மூசா | கிள்ளான் | 60,000 |
| தாமான் செந்தோசா | கிள்ளான் | 70,000 |
| லாடாங் ஐ-லேண்ட்ஸ் | கிள்ளான் | 85,000 |
| லாடாங் பத்து அம்பாட் | கிள்ளான் | 50,000 |
| சிம்பாங் லீமா | கிள்ளான் | 100,000 |
| ஐ-கோம் | கிள்ளான் | 50,000 |
| லாடாங் எமரல்ட் | கிள்ளான் | 80,000 |
| பூலாவ் கேரி செலாத்தான் | கோலலங்காட் | 40,000 |
| பூலாவ் கேரி பாராட் | கோலலங்காட் | 50,000 |
| பூலாவ் கேரி தீமோர் | கோலலங்காட் | 40,000 |
| தெலுக் பங்மொகாராங் | கோலலங்காட் | 85,000 |
| சுங்கை சீடு | கோலலங்காட் | 40,000 |
| சுங்கை மங்கீஸ் | கோலலங்காட் | 40,000 |
| தெலுக் டத்தோ | கோலலங்காட் | 60 000 |
| ஜிஞ்சாரோம் | கோலலங்காட் | 40,000 |
| சிம்பாங் மோரிப் | கோலலங்காட் | 40,000 |
| லா. சுங்கை புவாயா | கோலலங்காட் | 40,000 |
| ஜூக்ரா | கோலலங்காட் | 40,000 |
| லாடாங் தும்போக் | கோலலங்காட் | 50,000 |
| லாடாங் காடோங் | கோலலங்காட் | 40,000 |
| லாடாங் வெஸ்ட்.கண்ட்ரி | சிப்பாங் | 40,000 |
| லாடாங் அம்பர்தினாங் | சிப்பாங் | 40,000 |
| டெங்கில் | சிப்பாங் | 50,000 |
| பெர்மாத்தா | சிப்பாங் | 50,000 |
| லாடாங் பியூட் | சிப்பாங் | 20,000 |
| பண்டார் பாரு சாலாக் திங்கி | சிப்பாங் | 50,000 |
| தொலுக் மெர்பாவ் | சிப்பாங் | 50,000 |
| சிப்பாங் | சிப்பாங் | 50,000 |

# நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உ



சிலாங்கூர் மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி சுபாங் ஜெயா கம்போங் புக்கிட் லஞ்சாங் ஆற்று ஓர அணைகளை பார்வையிடும் போது.



வீ.கணபதிராவ் சமூக பொருளாதார மேம்பாடு, சமூக நலன், தொழிலாளர் ஆற்றல் ஆட்சிக் குழு உறுப்பினர் உணவு வழங்குகிறார்.



சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் அவர்களின் உதவியாளர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு பொருட்கள் வழங்குகிறார்கள்.



கிள்ளான் செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தொகுதி மக்களுக்கு உணவு வழங்குகிறார்.



ஷா அலாம் நகராண்மைக் கழக உறுப்பினர் மக்களிடம் விசாரிக்கிறார்.



செலயாங் நாடாளுமன்ற உறுப்பினர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு பொருட்கள் வழங்குகிறார்.

# றுப்பினர்கள் வெள்ளத்தின்போது....



மெலாவத்தி சட்டமன்ற உறுப்பினர் ஜுவாரியா சுல்கிஃப்லி மக்களுக்கு உதவி பொருட்களை வழங்குகிறார்.



மாநில சட்டமன்ற சபாநாயகர் இங் சூ லிங் உணவு பொருட்களை வழங்குகிறார்.



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு பொட்டலங்களை வழங்கும் இந்திய கிராம தலைவர்.



டீம் சிலாங்கூர் என்னும் பணிப்படை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட இடங்களை சுத்தம் செய்தனர்.



டத்தோ தெங் சாங் கிம் மேம்பாடு ஆட்சிக்குழு உறுப்பினர் வீட்டு உபயோகப் பொருட்களை மக்களுக்கு வழங்குகிறார்.



செப்பாங் நகராண்மைக் கழக உறுப்பினர் உணவு பொட்டலங்கள் வழங்குகிறார்.

# இந்திய சமூகத் தலைவரை அறிவோம்:



**கே. தங்கராஜன் (செந்தோசா தொகுதி)**

இந்திய சமூகத் தலைவர் அறிமுகம் எனும் இந்த அங்கத்தில் செந்தோசா சட்டமன்றத் தொகுதிக்கான இந்திய சமூகத் தலைவராக பொறுப்பு வகித்து வரும் தங்கராஜன் த/பெ அப்துல் காசிம் இம்முறை அறிமுகமாகிறார்.

தாமான் செந்தோசா, ஹராப்பான் ஷாபுடின் பி.கே. ஆர். கிளைத் தலைவரான இவர் கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் கட்சியில் சேவையாற்றி வருகிறார்.

இவ்வட்டாரத்திலுள்ள இந்தியர்கள் குறிப்பாக தனித்து வாழும் தாய்மார்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பினரின் பிரச்சனைகளை கண்டறிந்து சட்டமன்ற உறுப்பினர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் வாயிலாக உரிய தீர்வினைக் காணும் நடவடிக்கையில் இவர் ஈடுபட்டு வருகிறார். இது மட்டுமின்றி, சிலாங்கூர் மாநில அரசின் மக்கள் பரிவுத் திட்டங்கள் (ஐ.பி. ஆர்.) திட்டங்கள் மக்களை முறையாகச் சென்று சேர்வதை உறுதி செய்யும் பணியிலும் தாம் முழுமையாக ஈடுபட்டு வருவதாக கடந்த ஓராண்டு காலமாக இந்திய சமூகத் தலைவர் பொறுப்பை வகித்து வரும் தங்கராஜன் கூறினார்.

கோவிட்-19 பெருந்தொற்று சமயத்தில் தொகுதி உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் அவர்களின் முயற்சியால் இத்தொகுதியிலுள்ள 54,000 பேருக்கு சமைத்த உணவையும் மேலும் 25,000 பேருக்கு உணவுக் பொருள்களையும் விநியோகித்தோம். இது தவிர, இந்திய சமூகத் தலைவருக்கான நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு பாதிக்கப்பட்ட 15 குடும்பங்களுக் தலா 200 வெள்ளி மதிப்பிலான உணவுப் பொருள்களை விநியோகம் செய்துள்ளோம் என்று அவர் குறிப்பிட்டார்.

இத்தொகுதியிலுள்ள இந்திய இளைஞர்கள் மத்தியில் விளையாட்டு மீதான ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்வதற்காக காற்பந்து போட்டியை நடத்துவதற்கு தாம் திட்டமிட்டுள்ளதாகவும் தங்கராஜன் கூறினார்.

விளையாட்டில் ஈடுபாடு காட்டுவதன் மூலம் நமது இளைஞர்கள் சமூகப் பிரச்சனைகளில் சிக்குவதை தவிர்க்கவும் உடலாரோக்கியத்தைப் பேணவும் வாய்ப்பு கிடைக்கும் என்றார் அவர்.

# ஆபத்து , அவசர வேளைகளில் நண்பர்களை அறியலாம்



கடந்த வாரம் சிலாங்கூரிலும், ஸ்ரீ மூடாவிலும் ஏற்பட்ட வெள்ளம், ஆபத்து அவசர வேளைகளில் ஒருவருக்கு ஒருவர் உதவி கொள்வதில் மலேசியர்கள் எவ்வளவு உண்மையானவர்கள் அன்பானவர்கள் என்பதை உணர்த்துவதாக இருந்தது.

எனது வீடு ஸ்ரீ மூடாவில் உள்ளது. வெள்ளம் ஏற்பட்ட போது வீட்டு கூரை வழியாக தப்பித்தோம். வீட்டில் எந்த பொருளையும் எடுக்க முடியாத அளவுக்கு மிக வேகமாக வெள்ளம் உயர்ந்தது. வீட்டில் அத்தனை பொருட்களையும் இழந்த வேதனை ஒருபுறம், ஆற்று நீர் வடிந்த பின் வீடு இருந்த அலங்கோலம் எப்படி வீட்டை சுத்தப்படுத்த போகிறோம் என்ற வேதனை, பயம்.. பார்த்து பார்த்து அழகு படுத்தி, பராமரித்த வீடு ஆற்றுநீர் சேற்றில் மூழ்கி சாக்கடையானது.

இந் நிலையில் மன வேதனையில் நான் இருக்க, " நாங்கள் உன் வீட்டுக்கு வருகிறோம் இந்திரா" என்று நான் வேலை செய்யும் புரோட்டன் ஏடார் நிறுவனத்திலிருந்து என் கைபேசிக்கு அழைப்பு வந்தது.

நான் எதிர்பார்க்காமல் புரோட்டன் ஏடார் நிறுவனத்தின் விற்பனைக்கு பிந்திய சேவை பிரிவின் இயக்குனர் துவான் வான் அஸ்ரான் மற்றும் அப்பிரிவின் பொது மேலாளர் திரு. தான் கெங் லெங் 10க்கு மேற்பட்ட குழுவினருடன் வந்து, வீட்டை சுத்தப்படுத்தும் பணியில் காலை 8.30 க்கு இறங்கினார். நீரை பீச்சி அடிக்கும் கருவி துணையுடன் சுத்தமாக கழுவும் பணியை மாலை 4.00 மணிக்கு முடித்தனர். அந்த உதவி என்னை பெரிய மன அழுத்தத்திலிருந்து விடுவித்தது.

ஒரு நிறுவனத்தின் இயக்குநர் மற்றும் பொது மேலாளர்கள் எந்த தயக்கமும் பாகுபாடுமின்றி தங்கள் சொந்த வீட்டை சுத்தம் செய்வது போன்று, வீட்டை கழுவி கொடுத்தை மறக்க முடியாது.. ஒருவரை தவிர அந்த குழுவில் இடம்பெற்றிருந்த அனைவரும் இந்தியர் அல்லாதவர்கள்.

ஆபத்து அவசர வேளைகளில் பரஸ்பரம் உதவி கொள்வதிலும், இருப்பதை இல்லாதவர்களிடம் பகிர்ந்து கொள்வதில் மலேசியர்களுக்கு ஈடு மலேசியர்களே, இந்த இக்கட்டான சூழ்நிலையை கடக்க எனக்கு கைகொடுத்த புரோட்டோன் ஏடார் நிறுவன விற்பனைக்கு பிந்திய அலுவலர்கள் அனைவருக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார் வீட்டின் உரிமையாளர் இந்திரா.



# டீம் சிலாங்கூர் குழுவில் 400 பேர் இணைந்தனர்

## ஆர்வமுள்ளோர் சேர அழைப்பு

ஷா ஆலம் - வெள்ளம் பாதித்த இடங்களில் துப்புரவு பணிகளை மேற்கொள்வதற்கு டீம் சிலாங்கூர் தன்னார்வலர் குழுவில் நேற்று வரை 400 பேர் வரை இணைந்துள்ளனர்.

சமூக சேவையில் ஈடுபாடும் ஆரோக்கியமான உடல் நிலையும் கொண்டவர்கள் இந்த குழுவில் இணைந்து பணியாற்ற அழைக்கப்படுவதாக டீம் சிலாங்கூர் செயலகத்தின் தலைவர் ஷியாஹுய்செல் கெமான் கூறினார். சிலாங்கூர் எப்.ஏ. மற்றும் சிலாங்கூர் எப்.சி. கால்பந்து குழுக்களிடமிருந்தும் தன்னார்வலர்களின் பங்கேற்பை டீம் சிலாங்கூர் பெற்றுள்ளது.

வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ மேலும் அதிகமான பொதுமக்களின் பங்கேற்பை அக்குழு எதிர்பார்க்கிறது என்று அவர் சொன்னார்.

பெக்காவானிஸ் எனப்படும் சிலாங்கூர் மகளிர் சமூக நல அமைப்பின் ஒத்துழைப்புடன் இங்குள்ள கம்போங் லொம்போங்கில் துப்புரவு பணியை மேற்கொண்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

டீம் சிலாங்கூர் குழுவில் இணைந்து செயலாற்ற விரும்புவோர் bit.ly/SkuadBencanaTeamSelangor என்ற அகப்பக்கம் வாயிலாக அல்லது 013-5303578 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

சிலாங்கூரில் வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களை தற்காலிக நிவாரண மையங்களுக்கு கொண்டுச் சென்று சேர்க்கும் நடவடிக்கையில் ஈடுபடும்படி டீம் சிலாங்கூர் குழுவுக்கு மாநில அரசு உத்தரவிட்டிருந்தது.

மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுகளை விநியோகிக்கும் பணியிலும் இந்த டீம் சிலாங்கூர் தன்னார்வலர்கள் ஈடுபடுவர் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறியிருந்தார்.

# மாநில அரசின் சேவை அளப்பரியது

## முன்னாள் பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர்



பெட்டாலிங் ஜெயா- சிலாங்கூரில் உள்ள எல்லா தமிழ்ப் பள்ளிகளுக்கும் நிதியுதவி ரி.ம. 5 மில்லியன் வழங்கிவரும் சிலாங்கூர் அரசின் செயல் பாராட்டுக்குரியது. கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் சிலாங்கூரில் உள்ள பெரும் பான்மையான தமிழ்ப் பள்ளிகளுக்கு கணிசமான நிதியுதவி ஆண்டு தோரும் சிலாங்கூர் மாநில அரசு செய்து வருகிறது. 2008 ஆம் ஆண்டுக்கு முன்னர் சிலாங்கூரில் உள்ள தமிழ்ப் பள்ளிகள் சட்ட மன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், மாநில அரசு, மத்திய அரசு என்று கெஞ்சி கையேந்தி பிச்சை எடுத்த காலமாக இருந்தது என்பது வேதனையான காலம். ஆனால் 2008 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் முதன் முறையாக சிலாங்கூர் மாநிலத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இந்த ஆட்சி மாற்றத்திக்கு பின்னர் தான் சிலாங்கூரில் உள்ள தமிழ்ப் பள்ளிகளுக்கு விடிவு காலம் ஏற்பட்டது. ஆம் சிலாங்கூரில் எப்பிங்காம் தோட்ட தமிழ்ப் பள்ளிக்கும் விடிவு காலம் பிறந்தது. பல ஆண்டுகளாக நிதியிதவி இன்றி பெரும் போராட்டத்தை சந்தித்து வந்த பெற்றோர் ஆசிரியர் சங்கத்திக்கு விடிவு காலம் பிறந்தது. 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையில் *சிலாங்கூர் மாநில அரசு ரி.ம. 285,000.00* கொடுத்தது. இந்த நிதியை கொண்டு தான் 2010 ஆம் ஆண்டில் 28% யு.பி. எஸ்.ஆர் தேர்ச்சி விதமாக இருந்த எப்பிங்காம் தமிழ்ப் பள்ளி 2012 ஆம் ஆண்டில் 55 சதவீதமாக யு.பி.எஸ்.ஆர் தேர்ச்சி உயர்வுக்கு கொண்டு வர முடிந்தது. மேலும் எப்பிங்காம் தோட்ட தமிழ்ப் பள்ளிக்கு 2012 ஆண்டில் சிலாங்கூர் மாநில அரசு ரி.ம. 85,000.00 நிதியுதவி செய்தது. இந்த நிதியை கொண்டு தான் எப்பிங்காம் தோட்ட தமிழ்ப் பள்ளியின் கணினி வகுப்பறையில் 40 கணினிகள் பொருத்தப் பட்டது . மேலும் இந்த கணினி வகுப்பறை பெற்றோர் ஆசிரியர் சங்கத்தால் தொடர்ந்து முறையாக வழி நடத்தப் படுகிறது. சிலாங்கூர் தமிழ்ப் பள்ளிகளின் பொது வசதி முன்னேற்றத்திலும் கல்வி தர மேம்பாட்டிலும் சிலாங்கூர் மாநில அரசின் தொண்டு அளப்பரியது. இந்த மகத்தான சேவையை சிலாங்கூர் மாநில மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரியும் , மாநில அரசும், ஆட்சிக்குழு உறுப்பினர் கணபதிராவ் வீரமான் அவர்களும் தொடர்ந்து செய்ய வேண்டும்.

நமது இளைய தலை முறையினரின் வாழ்வில் விடிவு காலம் பிறக்க வேண்டும். மாநில அரசின் மகத்தான சேவைக்கு இந்திய சமூகம் தொடர்ந்து ஆதரவு நல்க வேண்டும். என்று எப்பிங்காம் தோட்ட தமிழ்ப் பள்ளியின் முன்னாள் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் சுப்பையா சுப்ரமணியம் சிலாவ்கூர் இன்றுவிடம் கூறினார்.

# சிலாங்கூர் இந்தியர்கள் சிறு தொழில் மேம்பாட்டு ''சித்தம்"

## அமைப்பின் வழி டீமளா தேவிக்கு தையல் இயந்திரம் !

ஷா ஆலம் – தெலுக் பங்ளிமாகாராங் வட்டாரத்தில் தையல் தொழிலில் ஈடுபட்டு வரும் திருமதி டீமளா தேவிக்கு "சித்தம்" எனப்படும் சிலாங்கூர் இந்தியர் தொழில் ஆர்வலர் மையத்தின் ஏற்பாட்டில் தையல் இயந்திரம் வழங்கப்பட்டது.

நீண்டகாலமாக தையல் தொழிலில் ஈடுபட்டு வந்த போதிலும் தொழிலை விரிவுபடுத்துவதற்கு தேவையான இயந்திரங்கள் இல்லாத காரணத்தால் அவர் சிரமத்தை எதிர்நோக்கி வந்தார்.




சித்தம் அமைப்பின் அதிகாரி தீபன் சுப்பிரமணியம் திருமதி டீமளா தேவியிடம் சுமார் 8,500 வெள்ளி மதிப்புள்ள இந்த தையல் இயந்திரத்தை நேரில் சென்று ஒப்படைத்தார்.

ஹிஜ்ரா சிலாங்கூர் அறவாரியத்தின் மூலம் வர்த்தக கடனுதவி பெறுவதற்கான வாய்ப்பும் அந்த பெண்மணிக்கு வழங்கப்பட்டது. வர்த்தகத்தை விரிவாக்கம் செய்ய விரும்புவோருக்கு 30,000 வெள்ளி வரை கடனுதவி வழங்கப்படுகிறது. தனது தையல் நிலையத்தை சீரமைக்கும் பணியை மேற்கொள்ள இந்த கடனுதவி அம்மாதுவுக்கு துணை புரியும்.

சித்தம் மற்றும் ஹிஜ்ரா அறவாரியத்தின் வாயிலாக வழங்கப்படும் உதவியை திருமதி டீமளா தேவி முறையாக பயன்படுத்தி வர்த்தகத்தை விரிவாக்கம் செய்வார் எனத் தாங்கள் எதிர்பார்ப்பதாக தீபன் சுப்பிரமணியம் கூறினார்.

# தசரத ராஜுக்கு மோட்டார் சைக்கிள் பழுதுபார்ப்பு உபகரணங்களை ஐ-சீட் வழங்கியது



ஷா ஆலம் – ஐ.சீட் எனப்படும் சிலாங்கூர் இந்தியச் சமூக மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு இலாகாவின் சபாக் பெர்ணம் வட்டாரத்திற்கான வர்த்தக உபகரணங்கள் வழங்கும் முதல் கட்ட நிகழ்வு கடந்த 9ஆம் தேதி வியாழக்கிமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மோட்டார் சைக்கிள் பழுது பார்ப்பு தொழிலை மேற்கொண்டு வரும் தசரத ராஜு என்பவருக்கு ஏர் கொம்ப்ரேசர், கனரக டிரில் கருவி மற்றும் ஹைட்ரோலிக் ஜோக் ஆகிய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மொத்தம் 4,500 வெள்ளி மதிப்பிலான இந்த உபகரணங்களை ஐ.சீட் சார்பாக ஊராட்சி மன்ற உறுப்பினர் மகேந்திரா அசோகா தசரத ராஜுவிடம் ஒப்படைத்தார்.

**SELANGOR INDRU**

*Sidang pengarang*

**PENASIHAT**
Lembaga Editorial MSSB


**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar

**KETUA PENGARANG**
A. Pakiyanathan

**JURUGAMBAR**
Asri sapfie,
Raheemie Arifin,
Hafiz Othman & Fikri Yusof

**Aras 11, Menara Bank Rakyat,
No. 1, Jalan Indah 14/ 8,
Seksyen 14, 40000 Shah Alam,
Selangor**
*Tel: 03-55234856*
*Faks:03-55235856*
*Email: info@mediaselangor.com*

# ஷா ஆலமில் குப்பைகள் நிறைந்த பகுதிகள் சுத்தம் செய்யப்படும்




ஷா ஆலம் – வெள்ளம் காரணமாக ஷா ஆலம் வட்டாரத்தின் பல்வேறு பகுதிகளில் குவிந்து காணப்படும் குப்பைகள் விரைந்து அகற்றப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். பாடாங் ஜாவாவில் வட்டாரத்தின் ஒரு பகுதியில் குப்பைகள் அகற்றப்படுவதற்கு முன்னரும் அகற்றப்பட்ட பின்னரும் உள்ள காட்சியை சித்தரிக்கும் புகைப்படங்களை அமிருடின் தனது டிவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். அப்பகுதியில் 20 நிமிடங்களில் குப்பைகள் அகற்றப்பட்டு இடம் முற்றிலும் சுத்தப்படுத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டிருந்தார். வெள்ளத்தால் சேதமடைந்த வீட்டு தளவாடப் பொருள்கள் அடங்கிய குப்பைகள் அகற்றப்பட்டு விட்டதை நாங்கள் மேற்கொண்ட ஆய்வுகள் காட்டுகின்றன. இந்த நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று அவர் சொன்னார். மாநிலத்தில் வெள்ளத்தால் குவிந்துள்ள குப்பைகளை அகற்றுவதற்கு இரண்டு வார காலம் பிடிக்கும் என மாநில அரசு கருதுகிறது. தற்போது குப்பைகளை அகற்றும் பணி 25 விழுக்காடு பூர்த்தியடைந்துள்ளதாகவும் வார இறுதிக்குள் இந்த எண்ணிக்கை 50 விழுக்காட்டை எட்டும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் மந்திரி புசார் குறிப்பிட்டிருந்தார்

# குறைந்த வருமானம் பெறும் 7,000 குடும்பங்களுக்கு உதவிப் பொருள் விநியோகம்



பூச்சோங் – சிலாங்கூர் மாநிலத்திலுள்ள குறைந்த வருமானம் பெறும் பி40 பிரிவைச் சேர்ந்த சுமார் 7,000 குடும்பங்களுக்கு பால், குழந்தைகளுக்கான பெம்பர்ஸ் போன்ற பொருள்கள் வழங்கப்படும். கடந்த ஜூலை மாதம் தொடங்கப்பட்ட முதல் கட்ட விநியோகத் திட்டத்தின் கீழ் இதுவரை 1,510 பேருக்கு சுமார் 200,000 வெள்ளி மதிப்பிலான பொருள்கள் வழங்கப்பட்டுள்ளதாக மகளிர் மற்றும் குடும்ப மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட் கூறினார். சுமார் 5,600 பேரை உள்ளடக்கிய இரண்டாம் கட்ட நடவடிக்கையின் போது 336,000 வெள்ளி மதிப்பிலான பொருள்கள் சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு விநியோகிக்கப்படும் என்று அவர் சொன்னார். கோவிட்-19 பெருந்தொற்று பரவலால் பாதிக்கப்பட்டுள்ள இல்லத்தரசிகளின் சுமையை ஓரளவு குறைப்பதற்கும் குழந்தைகளின் வளர்ச்சிக்கு உதவுதற்கும் இத்திட்டம் துணை புரியும் என்று அவர் கூறினார். வசதி குறைந்தவர்கள் மற்றும் உதவி தேவைப்படுவோர் அருகிலுள்ள சமூக சேவை மையங்களைத் தொடர்பு கொள்ளும்படி அவர் கேட்டுக் கொண்டார். இங்குள்ள கம்போங் ஸ்ரீ அமான் எம்.பி.எஸ்.ஜே. சமூக மண்டபத்தில் குறைந்த வருமானம் பெறும் தரப்பினருக்கு உதவிப் பொருள்களை வழங்கியப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

# வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளை சுத்தம் செய்வதில் டீம் சிலாங்கூர் உதவி



ஷா ஆலம் – டீம் சிலாங்கூர் தன்னார்வலர் அமைப்பைச் சேர்ந்த 115 பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளைச் சுத்தம் செய்யும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

கோல லங்காட், கிள்ளான், கோல சிலாங்கூர், சிப்பாங், பெட்டாலிங் ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள எட்டு பகுதிகளில் இந்த துப்புரவு இயக்கத்தை கடந்த எட்டு நாட்களாக தாங்கள் மேற்கொண்டு வருவதாக டீம் சிலாங்கூர் செயலகத்தின் தலைவர் ஷியாய்ஷால் கெமான் கூறினார்.

காலை 8.45 மணி தொடங்கி கம்போங் லாமா, கம்போங் தஞ்சோங் சியாம், கம்போங் ஸ்ரீ தஞ்சோங்கில் வீடுகளைச் சுத்தம் செய்யும் பணியில் தாங்கள் ஈடுபட்டு வருவதாக அவர் சொன்னார்.

இது தவிர, கிள்ளானிலுள்ள கம்போங் லொம்போங், டேசா சுபாங் பெராந்தாவ், தாமான் செத்தியா வாரிசான் அகிய இடங்களில் உணவு விநியோகிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அந்த நந்த இடத்தின் தேவைக்கேற்ப 20 முதல் 30 தன்னார்வலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த வாரம் தொடங்கி இதுவரை துப்புரவு பணியில் 250க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் முழுமூச்சாக ஈடுபட்டு வருவதாகவும் அவர் சொன்னார்.

# செந்தோசா தொகுதி ஏற்பாட்டில் 100 சிறார்களுக்கு விருப்பப் பொருள்கள் விநியோகம்




கிள்ளான் – தங்களுக்கு பிடித்தமான பொருள்களுக்கு உரிமையாளராகும் 100 சிறார்களின் கனவை நனவாக்கியுள்ளது செந்தோசா சட்டமன்றத் தொகுதி. கோவிட்-19 பெருந்தொற்று பரவல் காரணமாக தங்களின் விருப்பப் பொருள்களைப் பெறுவதற்கு நீண்ட நாட்கள் காத்திருந்த அவர்கள் நேற்று இங்குள்ள செந்தோசா தொகுதி சேவை மையத்தில் நடைபெற்ற நிகழ்வில் தங்களுக்குரிய பொருள்களை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டனர். கொன்சன்ட்ரிக்ஸ் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்ட “கிட்ஸ் விஷ்லிஸ்ட் காம் த்ரூ“ என்ற திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 100 சிறார்களுக்கு வெ. 50.00 முதல் வெ. 100.00 வரையிலான விருப்பப் பொருகள் வழங்கப்பட்டன என்று தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் கூறினார்.

ஐந்து முதல் 12 வயது வரையிலான அச்சிறார்களுக்கு சைக்கிள், சறுக்கு சக்கர பலகை, விளையாட்டு காலணி, விளையாட்டு சாதனங்கள், மற்றும் பள்ளி உபகரணங்கள் வழங்கப்பட்டன என்று அவர் சொன்னார். பெருந்தொற்று காலத்தில் வீட்டில் வெறுமனே பொழுதுதைக் கழிக்கும் கட்டாயத்தில் இருந்த பி40 தரப்பினரின் பிள்ளைகளின் நிலையை உணர்ந்து இத்திட்டத்தை அமல்படுத்தும் முடிவை கடந்த மார்ச் மாதம் தாங்கள் எடுத்ததாக அவர் தெரிவித்தார். கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக இத்திட்டம் சற்று தாமதமடைந்தாலும் அச்சிறார்களை மகிழ்ச்சிப் படுத்துவதற்குரிய சூழலை உருவாக்கும் கனவு நனவானது என்று தொகுதி சேவை மையத்தில் நேற்று செய்தியாளர்ளிடம் அவர் கூறினார்.

இதனிடையே, இத்திட்டம் குறித்து விவரித்த கொன்சென்ட்ரிக்ஸ் நிறுவனத்தின் இயக்குநர் ஸ்ரீநாத் வேணுகோபாலன், நிறுவன சமூகக் கடப்பாட்டின் அடிப்படையில் இத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு தங்கள் நிறுவனத்தின் 4,500 பணியாளர்களும் தங்கள் சொந்த பணம் மற்றும் முயற்சியில் இப்பொருள்களை திரட்டியதாக குறிப்பிட்டார். பெரும்பாலும் அந்நிய நாட்டினராக உள்ள எங்கள் தொழிலாளர்கள் ஒரே வார காலத்தில் குழுவாக பிரிந்து இப்பொருள்களை திரட்டும் பணியில் ஈடுபட்டனர் என்றார் அவர்.

# மனவளர்ச்சி குன்றிய சிறார் காப்பகத்திற்கு மாநில அரசு வெ. 45,800 மானியம்



பந்திங் – இங்கு செயல்பட்டு வரும் சிலாங்கூர் மனவளர்ச்சி குன்றிய சிறார் பராமரிப்பு சங்கத்திற்கு மாநில அரசு 45,800 வெள்ளி மானியம் வழங்கியுள்ளது.

கோவிட்-19 பெருந்தொற்று பரவியது முதல் இந்த காப்பகத்தை நடத்துவதில் பொருளாதார ரீதியாக சிரமத்தை எதிர்நோக்கி வந்த அச்சங்கத்தினருக்கு மாநில அரசின் இந்த உதவி பெரும் நிம்மதியை ஏற்படுத்தியுள்ளது.

நோய்த் தொற்று பரவலுக்குப் பின்னர் நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளிடமிருந்து நிதியுதவி கிடைப்பதில் சுணக்கம் ஏற்பட்டதாக அச்சங்கத்தின் தலைவர் எஸ். முருகையா @ ஜீவா கூறினார். தக்க சமயத்தில் நிதியுதவி வழங்கி இந்த காப்பகத்தின் அன்றாட நடவடிக்கைகள் சீராக நடைபெறுவதற்கு உதவிய சிலாங்கூர் மாநில அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்று அவர் சொன்னார்.

இங்குள்ள சிலாங்கூர் மன வளர்ச்சி குன்றிய சிறார் பராமரிப்பு சங்க காப்பகத்தில் நேற்று நடைபெற்ற 2021 சிலாங்கூர் நீடித்த சமூக நலத் திட்ட நிகழ்வின் போது முருகையா இதனைத் தெரிவித்தார். இந்த நிகழ்வில் சமூக நலத் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவிடமிருந்து இச்சங்கம் 45,800 வெள்ளி மானியத்தைப் பெற்றுக் கொண்டது. கடந்த 1996 ஆம் ஆண்டில் அம்பாங்கில் தொடங்கப்பட்ட இந்த சிறார் பராமரிப்பு சங்கம் 2012 ஆம் ஆண்டில் பந்திங் நகருக்கு மாற்றலானது. இந்த பராமரிப்பு மையத்தில் உள்ள 78 மன வளர்ச்சி குன்றிய சிறார்களைப் பராமரிக்கும் பணியில் 28 ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

# மாற்றுத் திறனாளின் பெற்றோர்களுக்கு மருத்துவப் பரிசோதனை



பந்திங் – மாற்றுத் திறனாளி பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு மருத்துவப் பரிசோதனையை மேற்கொள்ளும் மாநில அரசின் திட்டம் மக்கள் நலனில் அரசு கொண்டுள்ள அக்கறையை புலப்படுத்தும் வகையில் உள்ளது.

மாற்றுத் திறனாளி பிள்ளைகளைப் பராமரிப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல என்பதோடு அதற்கு பெற்றோர்கள் ஆரோக்கியத்துடன் இருப்பது அவசியம் என்று சிலாங்கூர் மனவளர்ச்சி குன்றிய சிறார் பராமரிப்பு சங்கத்தின் தலைவர் எஸ். முருகையா @ ஜீவன் கூறினார். இத்திட்டம் தொடர்பான மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரியின் அறிவிப்பை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம். சமூக நலனில் மட்டுமின்றி மாற்றுத் திறனாளிகள் விஷயத்திலும் மாநில அரசு கொண்டுள்ள பரிவை இது காட்டுகிறது என்று அவர் சொன்னார். மாற்றுத் திறனாளி பிள்ளைகளைப் பராமரிப்பது எளிதானது அல்ல என்பதோடு அதற்கு மிகுந்த பொறுமையும் தேவைப்படும். இதற்கு நல்ல உடலாரோக்கியத்துடன் இருப்பதும் அவசியமாகும் என்றார் அவர்.

இங்குள்ள சிலாங்கூர் மனவளர்ச்சி குன்றிய சிறார் பராமரிப்பு சங்கத்தில் நடைபெற்ற சிலாங்கூர் நீடித்த சமூக நல திட்டம் 2021 நிகழ்வில் செய்தியாளர்களைச் சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்தார். மாற்றுத் திறனாளி பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு விஷேச சுகாதார பரிசோதனைத் திட்டம் அமல்படுத்தப்படும் என்று கடந்த மாதம் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த போது மந்திரி புசார் கூறியிருந்தார்.

# தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களுக்கு தோக்கோ குரு விருது

சிலாங்கூரில் மக்கள் கூட்டணியின் ஆட்சி 2008 ம் ஆண்டு மலர்த்தது முதல், அது முன் எடுத்த மக்கள் நலத்திட்டங்களில் கல்வி மேம்பாடு முக்கிய ஒன்று, குறிப்பாக தமிழ்ப்பள்ளிகளின் வளர்ச்சிக்கு வழங்கி வரும் ஆதரவு.

அரசின் மானிய ஒதுக்கீடுகளுக்கு அரசியல் அடையாளம் வழங்கினாலும், ஆசிரியர்கள் கௌரவிப்பு, யூ.பி.எஸ்.ஆர் மாணவர்கள் பாராட்டு விழா, மற்றும் சிறந்த பள்ளிகளை தேர்ந்தெடுப்பது போன்றவை சமுதாய மேம்பாட்டுகளை மையமாக கொண்டுள்ளதை மறுக்க முடியாது என்கிறார் கோலசிலாங்கூர் சுங்கை திராப் தமிழ்ப்பள்ளியின் முன்னால் தலைமை ஆசிரியர் திரு. ல. பாலசுந்தரம்.

**வயதான எனக்கு சிறபிப்பு, அரசுக்கு என்ன லாபம்**

ஆசிரியர் பணிக்கு மட்டுமே தமிழிலும் தமிழர்களிடத்திலும், ஒரு தனி சிறப்பு உண்டு, எவரும் தங்கள் கண்களை மற்றவர்கள் கவனிப்பில் விடுவதில்லை, ஆனால், தங்கள் கண்மணிகளான பிள்ளைகளை வாரம் 5 நாட்களுக்கு தினசரி 4 மணி நேரங்களுக்கு மேல் ஆசிரியர்களை நம்பி விடுகிறார்கள், அதற்குதான் மாத பிதா குரு தெய்வம், எழுத்தறிவித்தவன் இறைவனாகும். என்று எல்லாம் ஆசிரியர்கள் சிறப்பிக்கப்படுகிறார்கள்.

ஆக, இந்த சமுதாயம் ஆசிரியர்களுக்கு எப்படி மதிப்பளிக்கிறதோ, அதேபோல் ஆசிரியர்களும் நடந்து கொண்டாலே




சிறப்பு. ஆசிரியர்கள் எப்படி உண்மையாக, நேர்மையாக பணியாற்ற வேண்டும் என நான் விவரிக்க தேவையில்லை..

என்றார்.. இந்த வயதில் எனக்கு இந்த சிறப்பினை செய்வதால் இந்த அரசுக்கு எந்த லாபமும் இல்லை. ஆனால் இப்படிப்பட்ட சிறப்பிப்புகளின் வழி, இந்த அரசு சமுதாயத்தில் நல்லெண்ணங்களை, நற்பண்புகளை, நல்ல முன்னுதாரணங்களை விதைக்க முற்படுகிறது, பணியில் உள்ள ஆசிரியர்கள் இன்னும் அக்கறையுடன் பணியாற்ற இது ஊக்குவிக்கும். ஆக இது சமுதாயத்தை புரனமைக்கும் செயல் என்கிறார்.

**தமிழ்ப்பள்ளிகள் மாணவர்களை பட்டதாரி மட்டுமின்றி சிறந்த மனிதனாகவும் உருவாக்குகிறது.**

இந்த போற்றுதலுக்கு தங்கள் காலத்தில் புரிந்த சாதனைகள் என்ன என்ற கேள்விக்கு அவர் மேலும் கூறுகையில், தோட்டப்புறங்களில் குறிக்காக ஒதுக்குப்புற பகுதிகளிலிருந்து ஒரு மாணவர் பல்கலைக்கழகம் செல்வது, அவர் கல்வி கற்ற பள்ளிக்கு பெருமை. அதிலும் தமிழ் பள்ளிகளிலிருந்து பல்கலைக்கழகம் சென்று உயர் பதவிகளை அவர்கள் அடையும் பொழுது, ஆனந்தம் மேலோங்குகிறது. ஆம் 2000 மாவது ஆண்டுக்கு முன் பணியாற்றிய ஆசிரியர் என்ற ரீதியில் அப்படிப்பட்ட மாணவர்களை எங்கள் பள்ளியும் பெற்றிருந்தது என்பது ஒரு சிறப்புதானே! நமது தோட்டப்புற மாணவர்களிடம் குடிக்கொண்டிருக்கும் தாழ்வு மனப்பான்மையை அழிப்பது, அவர்கள் வழியில் உள்ள பெரிய தடையை உடைப்பதற்கு ஒப்பாகும்.. அதற்கு ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் பங்கு அளப்பரியது, மாணவர்களை தன் பிளைகளைப்போன்று எண்ணி அக்கறையுடன் கல்வி கற்று தருவது, மட்டுமின்றி அவர்களை போற்றுதலுக்குரிய மனிதராக கட்டமைப்பதும் தமிழ்ப்பள்ளியே, பள்ளி சீருடைகள் அவர்களுக்கு தன்னம்பிக்கை அளிக்கவே, என்றார் அவர். அர்ப்பணிப்பு உணர்வு மிக்க ஆசிரியர்களின் செயலால் தோட்ட குடியிருப்புகளுக்கு வெளியிலிருந்தும் மாணவர்களை இழுத்தது வெற்றியே ! எந்த அரசியல் செல்வாக்கு மின்றி மாணவர்களின் எண்ணிக்கை ஏற்றத்திற்கு ஏற்ப பள்ளியில் அதிக வகுப்பறைகள், வாசகசாலை மற்றும் உணவுகூட வசதிகளை மேம்படுத்த முடிந்ததும் என் காலத்தில் ஏற்படுத்திய சாதனை தான் என்றார்.

# கோலக்கிள்ளான் தமிழ்ப்பள்ளி தலைமை ஆசிரியருக்கு தோக்கோ குரு விருது

2019 ஆண்டில் ஆசிரியர் திலகங்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட 5 தலைமை ஆசிரியர்களில் கோலக் கிள்ளான் வாட்சன் சாலை தமிழ்ப்பள்ளியின் முன்னால் தலைமை ஆசிரியர் திருமதி. P. சந்திர தேவியும் ஒருவர்.

இவர் அப்பள்ளியில் முன்பு சாதாரண ஆசிரியராக இருந்து, பிகே 1 ஆக பதவி உயர் பெற்று பந்திங் சுங்கை மங்கீஸ் தமிழ் பள்ளிக்கு மாற்றலாகி மீண்டும் தலைமை ஆசிரியராக பதவி உயர்வு பெற்று வாட்சன் தமிழ்ப்பள்ளிக்கு திரும்பியவர். இவர் தலைமையாசிரியராக இருந்த காலத்தில் பள்ளி பல சாதனைகளை புரிந்து சிறந்த முறையில் இயங்கியதாக சிலாங்கூர்இன்று அறிகிறது. பாலர் பள்ளிகளே மூன்று வகுப்பறைகளில் செயல் பட்டதுடன், மாணவர்கள் எண்ணிக்கையும் சுமார் 700 லிருந்து 1200 ராக உயர்வு கண்டுள்ளது. மாணவர்கள் எண்ணிக்கை உயர்வுக்கு ஏற்றார்போல் பள்ளிக்கு மூன்று மாடி கட்டிடம் வாசக சாலை, 20 கணினிகளுடன் கூடிய கணினி வகுப்பறை கொண்ட முதல் தமிழ் பள்ளியாகவும் உருவெடுத்துள்ளது.

நாட்டில் பல தமிழ்ப்பள்ளிகளில் இன்று மாணவர்கள் எண்ணிக்கை சரிந்து வரும் வேளையில், உங்கள் காலத்தில் பள்ளியின் மாணவர்கள் எண்ணிக்கை உயர்வு எப்படி ஏற்பட்டது என்று கேட்டபோது, அவர் சக ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கம் கொடுத்த ஒத்துழைப்பு அதற்கு முக்கிய காரணம் என்றார். மேலும் அது குறித்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில், ஆசிரியர் தொழில் ஒரு சிறந்த மதிப்பு மிக்க அரசாங்க பணி, அதனை உண்மையாக முழு ஈடுபாடுடன் செய்து வந்தால் வெற்றி நிச்சயம், இரண்டாவது நம் பிள்ளைகளிடம் அன்பாக பழகி அரவணைக்க வேண்டும். மூன்றாவது சகா ஆசிரியர்களை விளங்கிக்கொண்டு செயல்படுவது அவசியம்.

ஆசிரியர் தொழிலில் மட்டுமே வெற்றியில் சமுதாயத்திற்கு பெரும் பங்கு கிடைக்கிறது. ஆம், இங்கே வெற்றி என்பது மாணவர்களின் தேர்ச்சியும், அவர்களின் முன்னேற்றம் மட்டுமே !

ஆசிரியர்களும் மனிதர்களே, அவர்களுக்கும் பிரச்சனைகள் உண்டு, ஆனால் வெளி பிரச்சனைகள், மாணவர்களை பாதிக்க வண்ணம் பார்த்துக் கொண்டேன். இதனால் ஆசிரியர்களிடமிருந்து நல்ல ஒத்துழைப்பையும், மாணவர்களிடம் நல்ல கல்வி மேம்பாட்டையும் காண முடிந்தது. ஆசிரியர்கள் அன்பாக பாடம் நடத்தினால் மாணவர்கள் ஆர்வமுடன் கல்வி கற்பார்கள், பிள்ளைகளின் கல்வி மேம்பாடே, பெற்றோரை திருப்தி படுத்தும், திருப்தியான பெற்றோர்களே பள்ளி வளர்ச்சிக்கு உதவுகின்றனர் என்றார் வெற்றிகரமாக வாட்சன் சாலை பள்ளியை வழி நடத்தி ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் திருமதி. P. சந்திர தேவி

# பேரிடர் மேலாண்மை கொள்கையை மறுஆய்வு செய்ய ஆணையம் அமைப்பீர்

சுங்கை பட்டாணி – நாட்டில் பேரிடர்களை எதிர் கொள்வது மற்றும் கையாள்வதில் சம்பந்தப்பட்ட துறைகளின் பங்களிப்பை மறுஆய்வு செய்ய ஆணையத்தை அமைக்கும்படி அரசாங்கத்தை பி.கே.ஆர். கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் வலியுறுத்தியுள்ளார். முன்னேற்பாடுகளை முறையாக மேற்கொள்ளவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவாக உதவிகள் வழங்கவும் இந்நடவடிக்கை அவசியமாவதாக எதிர்க்கட்சித் தலைவருமான அவர் சொன்னார். கடந்த வெள்ளிக்கிழமை முதல் நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதில் காணப்பட்ட மந்த நிலை பொது மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதில் காணப்படும் அலட்சியம் காரணமாக பொது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள வெறுப்புணர்வை நம்மால் உணர முடிகிறது. ஆகவேதான், பேரிடர் மேலாண்மை தொடர்பான கொள்கைகளை ஆராய ஆணையம் அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இதன் மூலம் பிரச்சனைகள் மறுபடியும் நிகழாதிருப்பதை உறுதி செய்ய முடியும் என்றார் அவர். எனினும், மீட்பு பணியில் மந்த நிலை காணப்பட்டதற்கு மலேசிய ஆயுதப் படை, தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை போன்ற அரசு நிறுவனங்களை சில தரப்பினர் குறை கூறுவதில் தமக்கு உடன்பாடில்லை என்றும் அவர் கூறினார். தங்களுக்கு முறையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் அத்துறைகள் நிச்சயம் விரைவாக செயல்பட்டிருக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். வெள்ள பேரிடர் மேலாண்மையில் பலவீனங்கள் நிலவுவதை பிரதமர்



டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் ஒப்புக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 2022 இறுதிக்குள் 60 சதவீத RFID

கோலாலம்பூர் – 2022 ஆம் ஆண்டு இறுதிக்குள் டோல் கட்டணத்தில் ரேடியோ அதிர்வெண் அடையாள (RFID) தொழில்நுட்பத்தை 60 சதவிகிதம் பயன்படுத்த பணி அமைச்சகம் இலக்கு வைத்துள்ளது என்று டேவான் நெகாராவில் இன்று தெரிவித்தார். 2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் தச் என் கோ மற்றும் ஸ்மார்ட்டாக் கார்டுகளின் பயன்பாட்டை நிறுத்தவும் அமைச்சகம் இலக்கு வைத்துள்ளதாக பணிகளின் துணை அமைச்சர் டத்தோ ஆர்தர் ஜோசப் குருப் தெரிவித்தார். "நெடுஞ்சாலைப் பயனர்கள் தெரிவிக்கும் கவலைகளை நாங்கள் புரிந்துகொள்கிறோம், தற்போது, தச் என் கோ மற்றும் ஸ்மா ர்ட்டாக் கார்டு லேன்கள் அனைத்து நெடுஞ்சாலைகளிலும் செயல்பாட்டில் உள்ளன, மேலும் அவை RFID பயன்பாட்டு விகிதங்கள் மற்றும் RFID லேன் கிடைக்கும் தன்மையைக் கருத்தில் கொண்டு படிப்படியாக அகற்றப்படும்." என்று கேள்வி–பதில் அமர்வின் போது கூறினார். RFID தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது குறித்த அமைச்சகத்தின் திட்டங்கள் குறித்து அத்துடன், SmartTAG க்கு தேவையான பேட்டரியை மாற்றுவது போன்ற பராமரிப்புச் செலவுகள் இல்லாததுடன், ஆன்லைனில் டாப்–அப் செய்வதை எளிதாக்குவது (RFIDக்கு). "RFID பாதையில், ஒரு மணி நேரத்திற்கு 1,000 வாகனங்கள் கடக்க முடியும், ஆனால் Touch' n Go ஒரு மணி நேரத்திற்கு 550 வாகனங்கள் மட்டுமே, அதாவது இந்த தொழில்நுட்பம் (RFID) உண்மையில் சுங்கச்சாவடிகளில் நெரிசலைக் குறைக்க உதவும். மின்னணு பணப்பைகள் (இ–வாலட்கள்) மூலம் RFID (சாதனம்) வாங்கினால் அரசாங்கம் இப்போது RM10 தள்ளுபடியை




வழங்கும், அதே நேரத்தில் புதிய கார் வாங்குபவர்களுக்கு RFID சாதனத்துடன் வழங்குவது , ஏற்கனவே RFID அல்லாத சாதனங்களை வைத்திருப்பவர்களுக்கு கூடுதல் சலுகைகளை வழங்குவதற்கான சில வழிமுறைகளை நாங்கள் இன்னும் ஆராய்ந்து வருகிறோம்.," என்று அவர் கூறினார். ஸ்விட்ச் செய்யும் நுகர்வோருக்கு அரசாங்கம் இலவச நிறுவல் அல்லது மானியங்களை வழங்க உத்தேசித்துள்ளதா என்பதை அறிய விரும்பிய செனட்டர் செருவாண்டி சாத்' என்பவரின் மற்றொரு துணைக் கேள்விக்கு ஆர்தர் இவ்வாறு கூறினார்.

# ஏ.டி.எம். கட்டண அமலாக்கத்தை ரத்து

## கெஅடிலான் கோரிக்கை

ஷா ஆலம் – ஏ.டி.எம். எனப்படும் தானியங்கி பணப் பட்டுவாடா இயந்திரம் வழி மேற்கொள்ளப்படும் பணபட்டுவாடாவுக்கு ஒரு வெள்ளி கட்டணம் விதிக்கும் முடிவை ரத்து செய்யும்படி வங்கிகளுக்கு அரசாங்கம் உத்தரவிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு குறிப்பாக அதிக வசதிகளைக் கொண்டிராத புறநகர் வாசிகளுக்கு இந்த கட்டண முறை சுமையை ஏற்படுத்தும் என்பதை மக்களவையில் விவாதத்தின் போது உறுப்பினர்கள் வெளியிட்ட கருத்துகள் புலப்படுத்துவதாக கெஅடிலான் கட்சியின் தலைமைச் செயலாளர் சைபுடின் நசாத்தியோன் கூறினார். இந்த நடவடிக்கை மிகவும் தவறானது என்பதோடு மக்களை சிரமத்தில் ஆழ்த்தும் என்பது எனது கருத்தாகும். இதன் தொடர்பில் எனக்கு தனிப்பட்ட முறையில் நிறைய புகார்கள் வருவதோடு சமூக வலைத்தளங்களில் மக்கள் கடுமையாக விமர்சித்து வருகின்றனர் என்று அவர் சொன்னார். கோவிட்–19 பெருந்தொற்று காலத்திலும் நுட்ப அடிப்படையில் ஆரோக்கியமான வளர்ச்சியை பதிவு செய்த துறைகளில் வங்கித் துறையும் ஒன்றாக விளங்குகிறது. என்று அறிக்கை ஒன்றில் அவர் தெரிவித்தார். அடுத்தாண்டு பிப்ரவரி மாதம் முதல் ஏ.டி.எம். இயந்திரங்கள் வாயிலாக மேற்கொள்ளப்படும் வங்கிகளுக்கிடையிலான பண பரிமாற்றத்திற்கு வர்த்தக வங்கிகள் ஒரு வெள்ளி கட்டணத்தை விதிக்கவுள்ளதாக கூறப்படுவது தொடர்பில் அவர் இவ்வாறு கருத்துரைத்தார்.

# சட்டம் 342 இல் திருத்தங்கள் அடுத்த

## பாராளுமன்ற கூட்டத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது

கோலாலம்பூர் – தொற்று நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சட்டம் 1988 (சட்டம் 342) இல் இன்று விவாதிக்கப்பட்டு முடிவு செய்யப்பட இருந்த திருத்தங்கள் அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன. நாட்டின் தற்போதைய வெள்ளச் சூழலைக் கருத்தில் கொண்டு, பிரதமர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாகோப் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராகிம் ஆகியோருடன் கலந்துரையாடிய பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக சுகாதார அமைச்சர் கைரி ஜமாலுடின் கூறினார். "டேவான் ரக்யாட்டின் அமர்வு கட்டளை 62ன் படி, இன்றைய கூட்டத்தின் அலுவல் வரிசையில், தொற்று நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு (திருத்தம்) மசோதா 2021ஐ அடுத்த கூட்டத்திற்கு இரண்டாவது மற்றும் மூன்றாவது வாசிப்புக்காக ஒத்திவைக்க நான் முன்மொழிகிறேன்," என்று அவர் கூறினார். இன்று டேவான் ராக்யாட்டில் கூறினார். டேவான் ராக்யாட் கடந்த வியாழனன்று முடிவடைய இருந்தது, ஆனால் தொற்று நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு (திருத்தம்) மசோதா 2021 ஐ விவாதிக்க மற்றும் நிறைவேற்ற இன்றைக்கு மட்டும் மேலும் ஒரு நாள் நீட்டிக்கப்பட்டது. கைரியின் கூற்றுப்படி, மத்திய அரசுக்கும் பக்காத்தான் ஹராப்பானுக்கும் இடையிலான மாற்றம் மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மை குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் (MoU) ஆவிக்கு ஏற்ப இன்று காலை 8 மணிக்கு சுகாதாரம், அறிவியல் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான நாடாளுமன்றத் தேர்வுக் குழுவுடன் அமைச்சகம் ஒரு நிச்சயதார்த்த அமர்வை நடத்தியது. (PH) சட்டத்திருத்தத்தில் தேவையான விதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் உட்பட சட்டம் 342 க்கு திருத்தங்கள் குறித்த விவரங்களை அவர் தாக்கல் செய்ததாக அவர் கூறினார்.

# துயர் துடைப்பு மையங்களில் தங்கியிருந்தவர்கள் வெ.1,000 பெற பாரங்களை பூர்த்தி செய்ய வேண்டியதில்லை

ஷா ஆலம் – அரசாங்க அல்லது தனியார் துறையால் நடத்தப்பட்ட தற்காலிக வெள்ள நிவாரண மையங்களில் தங்கியிருந்தவர்கள் 1,000 வெள்ளி உதவித் தொகையைப் பெறுவதற்கு விண்ணப்ப பாரங்களைப் பூர்த்தி செய்ய வேண்டியதில்லை.

பாதிக்கப்பட்டவர்களுக்கு சிலாங்கூர் பங்கிட் திட்டத்தின் கீழ் உடனடியாக உதவித் தொகை வழங்குவதற்கு ஏதுவாக சம்பந்தப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் தற்காலிக நிவாரண மையங்களிடமிருந்து பெறப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.



அரசாங்க மற்றும் தனியார் தற்காலிக வெள்ள நிவாரண மையங்களில் தங்கியிருந்தவர்கள் உதவித் தொகைக்கு பதிவு செய்ய வேண்டியதில்லை. அங்கு தங்கியிராதவர்கள் மட்டுமே விரைவில் அமைக்கப்படவிருக்கும் ஓரிட மையங்களுக்கு செல்ல வேண்டும் என்றார் அவர்.

மூன்றாம் பிரிவைச் சேர்ந்தவர்கள் அதாவது வெள்ளத்தின் போது வீட்டிலேயே இருந்தவர்கள் மட்டுமே விண்ணப் பாரங்களை பூர்த்தி செய்ய வேண்டும். காரணம் அவர்கள் குறித்த விபரங்கள் நமக்கு கிடைக்கவில்லை என அவர் குறிப்பிட்டார். இந்த பிரிவைச் சேர்ந்தவர்களின் வீடுகளுக்கு அதிகாரிகள் நேரில் சென்று பதிவு நடவடிக்கையை மேற்கொள்வர். இத்திட்டம் வரும் ஜனவரி முதல் மேற்கொள்ளப்படும். மேலும், அடையாள ஆவணங்களை இழந்தவர்கள் மட்டுமே போலீசில் புகார் செய்ய வேண்டும். இப்பாரங்களை பூர்த்தி செய்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் ஓரிட மையங்களுக்கு நேரில் வரலாம் அல்லது இணையம் வாயிலாக பாரங்களை பதிவிறக்கம் செய்யலாம் என்று அமிருடின் சொன்னார்.

பாதிக்கப்பட்டவர்களை பதிவு செய்து நிதி வழங்கும் நடவடிக்கை வரும் புதன் கிழமை தொடங்கி மேற்கொள்ளப்படும் எனக் கூறிய அவர், வரும் ஜனவரி இறுதிக்குள் நிதி வழங்கும் பணி முற்றுப் பெறும் என்றார்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் வீடுகளைச் சுத்தம் செய்வதற்கு இணையம் வாயிலாக விண்ணப்பம் செய்யலாம்



ஷா ஆலம் – வெள்ளத்தால் சேதமடைந்த வீடுகளை சுத்தம் செய்வதற்கு தன்னார்வலர்களின் உதவி தேவைப்படுவோர் www.teguhbersama.com என்ற அகப்பக்கம் வாயிலாக விண்ணப்பம் செய்யலாம். வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய விரும்புவோரும் இதே அகப்பக்கத்தின் வாயிலாக தங்களின் நன்கொடைகளை வழங்கலாம் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளைச் சுத்தம் செய்வதற்கும் குப்பைகளை அகற்றுவதற்கும் உதவி தேவைப்படுவோர் சுபாங் ஜெயா சட்டமன்ற உறுப்பினர் மிஷல் இங் மேய் ஸீ ஏற்பாட்டிலான இந்த உதவித் திட்டத்திற்கு விண்ணப்பம் செய்யலாம் என அவர் சொன்னார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிலாங்கூர் மாநில மக்களுக்கு உதவுவதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த தன்னார்வலர்கள், தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்றார் அவர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் நோக்கில் மாநில அரசு தாபோங் இக்தியார் சிலாங்கூர் பங்கிட் நிதித் திட்டத்தை கடந்த 21 ஆம் தேதி தொடக்கியது. மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி தனது ஒரு மாத சம்பளத்தை வழங்கி இத்திட்டத்தை தொடக்கி வைத்தார்.

# வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு கேஸ் சிலிண்டர், அடுப்பு விநியோகம்

ஷா ஆலம் – வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும் மாநில அரசு எரிவாயு சமையல் அடுப்பு மற்றும் கேஸ் சிலிண்டர் வழங்கப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். இக்தியார் சிலாங்கூர் பங்கிட் நிதி மற்றும் வர்த்தக நிறுவனங்கள் வாயிலாக இத்திட்டம் அமல்படுத்தப்படும் என்று அவர் சொன்னார். அன்றாட வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவையாக விளங்கக்கூடிய சமையல் அடுப்புகள் மற்றும் எரிவாயு சிலிண்டர்களை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கவிருக்கிறோம் என்று மேலும் தெரிவித்தார். சிலாங்கூர் பாங்கிட் திட்ட நன்கொடை மற்றும் பிற அமைப்புகளின் பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்றார் அவர். நேற்று சிலாங்கூர் மாநில அரசு தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற வெள்ள நிலைமை குறித்த செய்தியாளர் கூட்டத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக எம்.ஆர்.சி.பி. கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து 1,000



எரிவாயு அடுப்புகளை மாநில அரசு நேற்று பெற்றதாக அவர் மேலும் சொன்னார்.

Diterbitkan oleh **Media Selangor Sdn Bhd** (sebelumnya dikenali **Communication Corporation Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakyat, No.1, Jalan Indah 14/8, Seksyen 14, 40000 Shah Alam, Selangor.
Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lot 2, Jalan Sepana 15/3, off Persiaran Selangor Seksyen 15, 40200 Shah Alam, Selangor.